


# ரமணோதயம்

ஜனவரி 2024
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 23 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2024

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2024


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | | 13 |
| 3 | தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த அருட்கொடை | Dr. வேங்கட் S ரமணன் | 15 |
| 4 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 27 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 35 |
| 6 | என். ஆர். கே (2) | வி. நிரஞ்சன் | 43 |
| 7 | வேதாந்த விசாரம் - அத்தியாயம்-8 | ஏ.வி. ராஜகோபாலன் | 51 |
| 9 | ரமண புராணம் | ஆகுரா | 63 |
| 11 | செய்திகள் | | 73 |

# ஆசிரியர் உரை

## கௌஸ்துபத்தைக் கைவிட்டு கிளிஞ்சலைப் பற்றலாமா?

ஞானமார்க்கத்தைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு முக்கியமான கொள்கைகளை சத்குருநாதர் குறிப்பிடுகிறார். இதுவே 'சாதன சதுஷ்டயம்' எனப்படுகிறது. இதன் முதல்படியே எது நிலையானது, எது நிலையற்றது என்பதைப் பகுத்தறிந்து, நிலையானதை பின்பற்றுவதே. அழிவற்ற ஒன்றை அடையத் தடையாய் இருக்கும் அழியும் பொருட்கள் மீதுள்ள நாட்டத்தை வகுத்து அழியாப் பொருளாம் ப்ரம்மத்தை நாடிச் செல்வதே விவேகம் என்கின்றனர் ஞானியர். அழியும் தேகத்தின்மீது செலுத்தும் நாட்டத்தை கைவிட்டு அழியாத ப்ரம்மத்துடன் ஒன்றும் வழியைப் பின்பற்றும் இதனை தனது புகழ்பெற்ற நூலான அபரோக்ஷாநுபூதியின் 33 ஆவது ஸ்லோகத்தில் சங்கர பகவத்பாதர் கூறுகிறார். "எனது தேஹம் தினந்தோறும் மாறிக் கொண்டே வருகிறது. ஆயினும் நானாகிய ஆன்மா மாறாமல் இருந்தவாறே உள்ளேன். இந்த உண்மையை அறிந்தவனால் எப்படித் தன்னை தேகத்துடன் ஒன்றாகக் கருத முடியும்?"

பகவான் கீதையின் ஆரம்பத்திலேயே "ஆத்மா ஒன்றே நித்யம். நீ எந்த உறவுகளிடம் சண்டையிடத் தயங்குகிறாயோ அந்த தேகங்களும் உறவுகளும் அநித்யம். எல்லா அனுபவங்களும் போவதும் வருவதுமாய் இருப்பவையே. ஆகமாபாயிந:

அநித்யா:” என்று கண்ணன் கூறுகிறான். அழியாமல் அளவிடற்கறியதாய் இருப்பது ஆத்மா ஒன்றே.

சரி! அநித்யமான இந்த லோகத்தில் பிறந்து விட்டோம். கடைத்தேற நித்யமான ஆத்மாவை அடையும் வழியாது எனில் ஒன்றே ஒன்றுதான்.

“அநித்யம் அஸுகம் லோகம்
இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்”

இந்த அநித்ய பந்தமான லோகத்திலிருந்து விடுபட நித்யமான பிரம்மத்தை வழிபடுக என்று கண்ணன் கூறுகிறான். இந்த உலகத்தில் நாம் பெரிய பேறு என்னவெனில் இந்தப் பேருண்மையை அறிந்து கொள்வதுதான். நிலையற்ற ஒன்றை ஸுகம் என்று கருதாமல் எந்த லட்சியத்திற்காக இந்த மனிதப் பிறவி எடுத்தோமோ அந்த லட்சியத்தை விரைவில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

கேனோபநிஷதம் (25) கூறுகிறது

“இஹ சேத3வேதீ3த2 ஸத்யமஸ்தி
ந சேதி3ஹாவேதீ3ந் மஹதீ விநஷ்டி:”

இந்தப் பிறவியில் பரமாத்மாவை அறிந்து கொண்டால் மிகச் சிறந்தது. அறியாவிட்டால் மிகப் பெரிய இழப்பு என்பது இதன் பொருள்.

‘அநாத்ம ஸ்ரீ விகர்ஹனம்’ என்னும் நூலில் ஒவ்வொரு ஸ்லோகத்தின் முதலடியின் இறுதியில் தத: கிம்? என்று சொல்லி இதனால் என்ன பிரயோஜனம் என்று கூறி இறுதி வரியில் யேந ஸ்வாத்மா நைநவ ஸாக்ஷாத் க்ருதோ பூத் [ஒருவன் தன் ஆத்மாவை அறியாமல் இருந்தால் இவற்றால் ஒரு பயனும் இல்லை.] என்று முடிக்கிறார். செல்வம், கல்வி, அரசின் அங்கீகாரம், அழகிய மனைவி போன்ற எல்லாவற்றையும் பயனற்ற ‘அநாத்மஸ்ரீ’ என்று கருதி துச்சமாக எடுத்து எறி என்கிறார். 12 வயது சிறுவனான நசிகேதஸும் இங்ஙனம் யமனின் ஆசைத்

தூண்டுதல்களையும் இவ்வாறே துச்சமாக எண்ணித் தூக்கி எறிகிறார்.

பகவானின் முதன்மைச் சீடரில் ஒருவராகிய டி.பி. ராமச்சந்திர ஐயர் பகவானிடம், நித்யம் அல்லது சாஸ்வதமானது என்பது எது? அநித்யமானது எது?" என வினவினார். பகவான் அதற்கு அழகாக விடையளிக்கிறார்.


"இந்த உலகமாக ஒளிரும் நாமங்களும் ரூபங்களும் எப்போதும் மாறும், அழியும். அதனால் அவற்றை மித்யை (பொய்) என்கிறோம். இவை நிலையற்றவை. அநித்யம். ஆத்மாவுக்கு வரம்பு கட்டி அதை இந்த நாம ரூபங்களாய்க் கருதுதல் மித்யை. அனைத்தையுமே ஆன்மாவாகக் கொள்ளுதல் சத்யம். ஞானி உலகை மித்யை என்று சொல்லிக் கொள்வதோடு நிறுத்திக் கொள்வதில்லை. இவையனைத்தும் 'பிரம்மம்' என்கிறான். அதற்கு அவன் உலகை, உலகு என்ற தனிப்பட்ட உண்மை என்று கருதுவதைக் கண்டிக்கிறான் என்பதே பொருள். உலகை பிரம்மமாகக் கருதுவதும் சத்யத்தின் பாற்படும். ஆன்மாவை அறிந்தவன் உலகு முழுவதையுமே ஆன்மாவாகவே காண்கிறான். ஞானிக்கு உலகம் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல. அவன் கவனம் எப்பொழுதுமே ஆன்மாவிலேயே உள்ளது. இது காகிதமும் அதன்மேல் எழுதப்பட்ட எழுத்துக்களும் போன்றது. நீ முழுவதும் எழுத்துக்களில் ஒன்றியுள்ளாய். அதனால் காகிதத்தின்மேல் எழுத்துக்கள் தோன்றினாலும், தோன்றாவிட்டாலும் உண்மையின் ஆதாரமாகக் காகிதத்தை மட்டுமே உணர்கிறாய்."

சாதனை செய்யும் அன்பர்களுக்கு வழக்கமாக வரும் ஐயம் யாதெனில் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் இரண்டு மூன்று நிமிடங்களுக்குமேல் மனம் அலைபாயாமல் இருக்க முடியவில்லையே

என்பதுதான். ஒரு அன்பர் இது குறித்து வினவியபோது பகவான், அநித்யமானவற்றை விட்டுவிட்டு நித்யமான ஆத்மாவைப் பிடித்துக் கொள்வதுதான் வழி என்று எடுத்துரைக்கிறார். எப்பொழுதெல்லாம் மனம் தியானத்தில் இருக்க முடிகிறதோ அதைப் பிடித்து இழுத்து ஆன்மாவில் பதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

தியானம் மந்திரம் ஜபம் போன்ற எதுவுமே தேவையில்லை. மனம் ஆன்மாவைத் தவிர வேறு ஒன்றிலும் ஈடுபடுவதைத் தவிர்த்தால் போதும். 'தியானம் என்பது ஆன்மாவை நினைப்பது என்பதைவிட அனாத்மாவை நினைப்பதை விட்டுவிடு' என்பதே. வெளி விஷயங்களை நினைப்பதை விட்டுவிட்டு, மனதை வெளியே போகாமல் தடுத்து உள்முகமாகத் திருப்பி ஆன்மாவில் பதித்தால் மட்டுமே இருக்கும் என்று இந்த ஆன்ம தத்துவத்தை அழகுற விளக்குகிறார்.

அதுபோல H.C. கன்னாவிற்கு விடை அளிக்கும் போதும் வேறு ஒரு அழகிய உதாரணத்தின் மூலம் இதை விளக்குகிறார். உங்கள் அலுவலக வேலைகளில் பற்றற்று இருக்கிறீர்கள். அதை உங்கள் கடமை எனச் செய்கிறீர்கள். அதனால் உரிமையாளர்க்கு லாபமா? நஷ்டமா? என்று எண்ணுவதில்லை. ஆனால் உங்கள் வீட்டுக் கடமைகளை பற்றுடன் செய்வதால் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நன்மையா? தீமையா? என்ற கவலையுடன் இருக்கிறீர்கள். வாழ்வின் எல்லா வேலைகளையுமே 'ஆன்மா ஒன்றே நித்யம்' எனக் கருத்தில் வைத்து பற்றுதல் இன்றிச் செய்கின்ற ஒருவன் ஆன்மாவில் நிலைத்திருந்தால் வாழ்வீன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாது என்று நினைப்பது தவறு. நடிகன் ஒருவன் ஒரு பாத்திரமாக வேடம் புனைந்து நடித்தாலும் அவனுக்குத் தான் உண்மையில் அந்தக் கதாபாத்திரம் அல்ல என்று



தெரியும். அது போலவே நீங்கள் அநித்யமான உடலல்ல. நித்யமான ஆத்மா என்று நிச்சலமாகத் தெரிந்த பின்னரும் உடல் உணர்வு ஏன் உங்களைக் கவலைக்கு உள்ளாக்க வேண்டும்? உடல் செய்யும் எந்தக் கருமமும் உங்களை நித்யமான ஆன்மாவில் நிலைப்பதில் இருந்து பாவனைப் படுத்தக் கூடாது. எப்படி ஒரு நடிகனுக்கு அவன் நடிக்கும் நிலையற்ற கதாபாத்திரம் அவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்வதற்கு எப்படி தடையாக இருக்காதோ, அதே போலவே திறமையாக உடல் சார்ந்த கடமைகளை செய்வது, நித்யமான ஆன்மாவில் நிலைப்பதற்கே தடையாக இருக்க முடியாது.

தேஹம் அநித்யம் ஆன்மா ஒன்றே நிச்சயமான உண்மை என்பதைப் பகவான் ஒவ்வொரு சந்தர்பத்திலும் எடுத்துரைப்பார். தனது பயங்கரமான மூட்டு வலியைக் கூட இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே! என்று புன்னகை மிளிரக் கூறுவார். டாக்டர்கள் இந்த வலிக்குக் கொடுக்கும் கவனத்தினால்தான் அது என்னை விடவே மாட்டேன்

*என்கிறது. கவனிப்பும், விருந்தோம்பலும ஓரிடத்தில் ஏகமாகக் கிடைத்தால் யார்தான் அதை விட்டுவிட்டுப் போவார்கள்? என்று கூறிச் சிரிப்பார் பகவான்.*

*பகவானின் இந்தக் கருத்தை தெளிவாக விளக்குவது யோக வாசிட்டம். இதில் ஓர் அத்யாயத்தில் ஜனகர் சித்தர்களின் சம்பாஷணைகளைக் கேட்டு எவ்வாறு முக்தி அடைந்தார் என்பது விவரிக்கப் பட்டுள்ளது. நூலின் அந்த சம்பாஷணை தமிழ் நூலில் ஆறு பாடல்களாக உள்ளது. ஆனால் மூல ஞான வாசிட்ட நூலில் ஐந்து ஸ்லோகங்கள் மட்டுமே உள்ளன. இதைக் கண்ணுற்ற பகவான் அந்த ஆறாவது பாடலையும் மொழிபெயர்த்து சேர்த்தார்.*

*நித்யா நித்ய வஸ்து சுலோகத்தை விளக்கும் இது ஆறு பாடல்களின் பொருளையும் பகவான் குஞ்சு சுவாமிக்கு விளக்கினார். அதன் பொருளாவது:*

*1) அறிபவனும் அறிபடு பொருளும் ஐக்கியமாகும் போது ஆத்மானந்தம் பிறக்கிறது. இதுவே ஆன்ம ஞானம் என்பது. இதையடைய முயற்சி செய்ய வேண்டும்.*

*2) காண்பவன், காண்படு பொருள் காணும் செயல் இம் மூன்றையும் காண்பிக்கும் 'தான்' எனும் ஆன்மாவை தியானித்தலே வாசனைகளை ஒழிக்கும் வழி. இருப்பிற்கும், இல்லாமைக்கும் ஆதாரமான ஆன்மாவைத் தியானிக்க வேண்டும்.*

*3) எல்லா உலகங்களும் எதன்கண் நிலையாய் உள்ளதோ எவையெல்லாம் எதனுடையதோ எதிலிருந்து அனைத்தும் எழுகின்றனவோ எதன் பொருட்டு எல்லாமே ஆகுமோ, எதனால் இவை எல்லாம் எழுந்து பின் எதுவாக ஆகின்றனவோ, அதுவே நித்ய வஸ்து, உள்ள பொருள் இதை, இந்த ஸ்வரூபத்தை நம் உள்ளத்தில் தியானம் செய்ய வேண்டும்.*

*4) 'நான்நான்' என்று ஒளிர்ந்து விளங்கும் அந்த பிரம்மத்தை தியானிக்க வேண்டும். தன் இதயத்தில் சத்வஸ்துவைத் தேடாமல் அறிவிலிகள் தனக்கு வெளியே புற உலகில் கடவுளைத் தேடி அலைகின்றனர். கௌஸ்துப மணியைத் தூர எறிந்துவிட்டு, கிளிஞ்சல்களைத் தேடி ஓடி அலைவதுபோல் அல்லவா இது!*

*5) ஆசைகளை அறவே ஒழித்தவன் மட்டுமே நித்ய வஸ்துவை அடைய முடியும். அன்றும், இன்றும் என்றும் தீய விஷயங்கள் இன்பம் தர மாட்டா என்று அறிந்தும் அவற்றைப் பற்றிக் கொண்டு இருப்பவன் பந்தத்திலேயே இருப்பான். அவனைக் 'கழுதை' என்று அழைத்தால் அவமானம் கழுதைக்கே.*

*6) தேவேந்திரன் தன் சக்தி வாய்ந்த ஆயுதத்தால் மலைகளை உடைத்தெறிவது போல் நாமும் நம் சக்தி வாய்ந்த பகுத்தறிவு ஆயுதத்தால் சீறிப் படமெடுத்தாடும் கொடிய புலன்களைத் தாக்கி அழிக்க வேண்டும். இதனால் அமைதியுற்று சாந்தி நிலையடைந்து சுகமாய் ஆன்மாவில் அமிழலாம்.*

பகவான் விவேகத்தின் சிகரம். உபாதி ரஹிதர். எதுவுமே அவரை எப்போதுமே பாதித்ததில்லை. தான் பெருமதிப்புக் கொண்டிருந்த காவ்ய கண்டர் நிரந்தரமாக ஆசிரமச் சூழலை விட்டு நீங்கி ஸிர்சிக்குப் புறப்பட்ட போதும், ஏன் போகின்றீர்கள்? என்று கேட்டதில்லை. பகவானின் நிழலான முருகனார் மற்றைய அதிதிகள் போல் ஆஸ்ரமத்தில் உணவு கொள்ளாமல் ஊருக்குள் பிக்ஷை எடுக்கச் செல்லும்போதும் ஆஸ்ரமத்திலேயே சாப்பிடலாம். பிக்ஷை எடுக்க வேண்டாம் என்று கூறியதில்லை. ஆஸ்ரமத்தில் ஆதியில் முக்கிய அங்கமாக விளங்கிய தண்டபாணி சுவாமிகள் சில ஊர்ப் பிரமுகர்களால் ஆஸ்ரமத்தை விட்டு நீங்கிய நிகழ்சசி பகவான் முன்னிலையில் நடந்தபோதும் பகவான் அதை சாட்சி மாத்திரமாக உபத்ருஷ்டாவாக

பார்த்துக் கொண்டு இருந்தார். எந்த நிகழ்ச்சி நடந்த போதிலும் எந்த உணர்ச்சி வெளிப்பாடும் இல்லாமல், ‘சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை’ போல சலனமற்ற முகத்துடன் வீற்றிருந்தார். சின்ன சுவாமியைத் தாக்க சிலர் முயன்றபோதும் சரி, மாலையில் சின்ன சுவாமி பத்திரமாகத் திரும்ப வந்த போதிலும் சலனமற்றே இருந்தார் பகவான். இதுவல்லவா அத்வைத ஞானத்தின் கொடுமுடி! (சின்ன ஸ்வாமியை ஆபத்திலிருந்து காப்பாற்றியதும், பகவானின் அருளே என்பதையும் வெளிப்படுத்தவில்லை அவர்.)

இந்த சலனமற்ற அருணகிரி பரமான்மா அருள் அலை வீசும் அமுதக் கடலாயும் விளங்கினார். முருகனார், பிக்ஷை எடுக்கப் போகும்போது தடுக்காத பகவான், ஆஸ்ரமத்தில் பாயசம் போன்ற விசேஷப் பிரசாதங்களைச் செய்யும்போது, முருகனார் பிக்ஷை எடுக்கப் போயுள்ளாரே? அவருக்கும் சிறிது எடுத்து வைக்கலாமே என்பார். எச்சம்மா பேத்தி, பாட்டி தன்னை உபவாசம் இருக்கச் சொன்னதாகச் சொல்லியபோது, நீ சாப்பிடலாம். சாதுக்கள் சங்கத்தில் உபவாசம் எதுவுமே தேவையில்லை என்று கூறிய தாயுள்ளம் மிக்கவர். மலரின் துளிர்களை அர்ச்சனைக்காகப் பறிப்பதைக் கண்டு தானும் வாடிச் சினந்த வைராக்ய சிகரம். அதே சமயம் அன்பு சாகாரமாகவும் அருள் அருவியாகவும் திகழ்ந்தது.

சண்முகம் என்ற அன்பர் எப்போதும் ஆஸ்ரமம் வரும்போது, சாம்பிராணி வாங்கிவந்து பகவான் சந்நிதியில் படைப்பார். ஒருதரம் அவர் தந்தை கைச் செலவுக்குப் பணம் தராததால் சாம்பிராணி வாங்காமல் எப்படிச் செல்வது என்று அவர் ஆஸ்ரமத்திற்கு அன்று வரவேயில்லை. மறுநாள் அவரைக் கண்ட பகவான் சாம்பிராணி வாங்கவில்லை என்று நேற்று ஏன் வராமல் இருந்தாய்! உள்ளத்தில் உண்மையான பக்தி ஒன்றே

*போதும். சாம்பிராணி போன்ற புறச் சடங்குகள் தேவையற்றவை; நிலையற்றவை என்று உபதேசித்தார்.*

*சில வறட்டு வேதாந்திகள் உலகம் அநித்யம், இதை நான் துறந்து செல்கிறேன் என்ற போது பகவான் இதன் ஆழ்ந்த தத்துவத்தை அழகுற விளக்குவார். சில அன்பர்கள் பகவானிடம் நான் செய்யும் உத்தியோகம் ஆத்ம சாதனை புரியத் தடையாக உள்ளது. எனவே அதை விட்டு விடலாம் என நினைக்கிறேன் என்று கூறியபோது, பகவான் உனது உத்தியோகமோ உலகமோ உனக்கு அந்நியமாக இல்லை. அவை உன்னுடன் உன் மனத்திற்கு உள்ளேயே உள்ளது. அவற்றை விட்டு எப்படி ஓடிப்போவது? எங்கே போவது. இந்த உலகமும் அதில் உள்ள பொருள்களும் ஒரு மனதின் நிழல் போன்றவையே என்று கூறி உடனே அதை விளக்க ஒரு கதையையும் கூறினார்.*

*ஒரு ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் தன்னுடைய நிழல் எப்போதும் தன்னுடன் வருவதை வெறுத்தான். அதைக் குழி தோண்டிப் புதைக்க முடிவு செய்தான். உடனே ஒரு பெரிய குழி தோண்டினான். அடியில் எட்டிப் பார்த்தான். அவன் நிழல் குழியின் அடியில் தெரிவதைக் கண்டான். எப்படி நிழல் குழியின் அடியில் போய்விட்டது. இப்போது அதை மண் போட்டு மூடிவிடலாம் என்று எண்ணி வேகமாய் மண்ணைத் தள்ளிக் குழியை மூடிப் பார்த்தால், குழியின் மேல் அவன் நிழல் மீண்டும் தெரிகிறது. அதேபோல் இந்த அநித்ய உலகமும், அதைத் தொடர்ந்த எண்ணங்களும் உனது உண்மையை 'உள்ளது' என்பதை அறியும்வரை விடாமல் தொடரும். அவற்றைத் துறந்து ஓடுவதை விட்டு நித்யமான ஆன்மாவைத் தேடி அதில் ஒடுங்கினால் அக்கணமே அநித்ய வஸ்துக்கள் அனைத்தும் தாமே உனது மனதிலிருந்து மறையும். ஏனெனில் உனது ஆணவம் உள்ளடக்கிய தோற்றங்கள்தாம்.*

*அசத்யமான வஸ்து, சத்யமான வஸ்து என்று இரண்டு உள்ளதா? என்ற ஒரு பக்தனின் கேள்விக்கு பகவான் விடை பகர்கிறார்.*

*நிஜமில்லாதது என்று ஒன்று இல்லை. ஆன்மா ஒன்றே உள்ளது. மற்றவை எல்லாம் அகந்தை ஏற்படுத்தும் உருவெளித் தோற்றங்களே என்று விளக்கினார். ஓர் அறையில் இடைவெளி இருக்கிறது. அதை நாம் பல்வேறு விதமான பொருட்களால் நிரப்புகிறோம். நமக்கு இடம் தேவையானால் அந்தப் பொருட்களை எல்லாம் நீக்கினால் இடம் கிடைக்கிறது. அதுபோலவே நம் மனத்திலிருந்து எல்லாக் குப்பைகளையும் எண்ணங்களையும், நீக்கினால் சலனமற்ற சாந்தி புலனாகிறது. எது சாந்தியைத் தடுக்கிறதோ அதை நீக்குக. சாந்தி ஒன்றே சத்யம் என்கிறார் பகவான்.*

*பகவானின் ஆன்ம போத நூலின் தமிழாக்கத்தின் 36 ஆவது பாடலில், “எந்தப் பொருளானது நித்தியமாய் எப்போதும் பரிசுத்தமாய் உள்ளதோ, எந்த ஸ்வரூபம் பந்தமற்ற இரண்டற்ற ஏக ஸ்வரூபமாய் விளங்குகிறதோ எந்த ஸ்வரூபம் இடையறாத பூர்ண ஆனந்தமாய் இரண்டற்றதாய் சச்சிதானந்தமாய் விளங்குகிறதோ அப் பிரம்ம ஸ்வரூபமே நான்” என்று உணர்வாயாக என்று விளக்குகிறார்.*

*இதையே ஓர் அழகிய உவமையில் விளக்குகிறார். நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு மரக் கட்டையானது அங்கே ஒரு திருடன் நிற்பதுபோல் தோன்றுகிறது. இது மனதின் பிரமை. இந்தப் பிரமைக்கு காரணம் இருட்டு. இந்த இருட்டினால் குழப்பம் அடைந்த மனிதன் ஒன்றை வேறாகக் கருதி மயங்குகிறான். விளக்கைக் கொண்டு வந்து பார்த்ததும இது மரக் கட்டைதான். மனிதன் அல்ல என்று தெரிகிறது. அதேபோன்றே அவித்தையின் பிரமையினால் மாயையினால் ஏற்பட்ட மன உபாதிகளுடன் கூடி பிரம்மமே ஜீவனாகத் தோன்றுகிறது.*

மரக்கட்டையைத் திருடன் இல்லை என்று அறிவுக்கு விளக்கைக் கொண்டு பரிசீலிப்பதுபோல் குரு உபதேசத்தைக் கொண்டு கூர்ந்த மதியுடன் உபாதிகளைப் பரிசீலித்தால் அவை யாவும் பொய்த் தோற்றமே என்று அறிவாய் என ஆத்ம போதம் 45 ஆவது பாடல் மொழி பெயர்ப்பில் பகவான் கூறுகிறார்.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# இனிவரும் திருநாட்கள் 2024

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| பொங்கல் | 15-01-2024 | திங்கள் |
| சின்னசுவாமிகள் ஆராதனை | 25-01-2024 | வியாழன் |
| சுந்தரம் ஐயர் தினம் | 29-02-2024 | வியாழன் |
| மகா சிவராத்திரி | 08-03-2024 | வெள்ளி |
| ஸ்ரீவித்யா ஹோமம் | 15-03-2024 | வெள்ளி |
| தெலுங்கு வருடப் பிறப்பு | 09-04-2024 | செவ்வாய் |
| தமிழ் வருடப் பிறப்பு | 14-04-2024 | ஞாயிறு |
| ஸ்ரீராம நவமி | 17-04-2024 | புதன் |
| பகவான் 74 ஆவது ஆராதனை | 06-05-2024 | திங்கள் |
| மகாபூஜை | 31-05-2024 | வெள்ளி |
| பசு லட்சுமி ஆராதனை | 18-06-2024 | செவ்வாய் |
| குரு பூர்ணிமா | 21-07-2024 | ஞாயிறு |



# தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த கொடை

**Dr. வேங்கட். S. ரமணன்**

*சென்ற இதழில் ஆச்ரம தலைவர் Dr, வேங்கட். S. ரமணன் அவர்கள் நூற்றாண்டு விழா தொடர்பாக நேரு நினைவாலய பொருட்காட்சி சாலையும், நூல் நிலையமும் இணைந்து நடத்திய விழாவில் ஆற்றிய உரையின் முதலாவது பாகமான 'தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த கொடை' என்னும் தலைப்பினைக் கண்டோம். இப்போது இரண்டாம் பகுதியாக, பாரத நாட்டின் ஆன்மிக மரபிற்கும், கலாசாரத்திற்கும் பகவான் அளித்த கொடையைக் காண்போம்.*

இந்தியாவின் ஆத்மிக மரபிற்கும், கலாசாரத்திற்கும் பகவான் அளித்த பெரும் கொடை, 'ஆத்ம விசாரம்' என்னும் பாரம்பரியம் மிக்க பாதையை நம்மிடையே மீட்டுக் கொணர்ந்து, அதை இக்கால வாழ்விற்குத் தக்கபடி, கடைப்பிடிக்கச் செய்ததே. பண்டைக் காலத்தில் 'ஆத்ம விசாரம்' என்பது, உலக வாழ்விலிருந்து முற்றும் ஒதுங்கி ஏகாந்தத்தில் தியானிக்க முற்படும் மிகச் சில தீரருக்காகவே ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றாகும். இந்தக் கடினம் நிறைந்த பாதை காலப்போக்கில் வழக்கொழிந்து போகத் துவங்கியது. பகவான் இந்தச் சக்திவாய்ந்த ஆய்வை மீண்டுக் கொணர்ந்து அதைக் கர்ம யோகத்துடன் இணைய வைத்து, இக்கால உலக நடைமுறைக்குப் பயன்படும் வகையில் செம்மைப் படுத்தினார். இந்த விசார யோகப் பயிற்சிக்கு எத்தகைய சடங்குகளோ, வெளி உலகு சார்ந்த பூஜை வழிகளோ தேவை இல்லாததால், இக்கால ஆன்மிகத் தேவைக்கு அது மிகச் சரியான வழியாகும்.

மேலும், ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்த வழிமுறையாய் இருந்த ஞானயோகத்தையும், அந்தக் கட்டுக்களில் இருந்து வெளியே எடுத்து, அனைத்து சமயங்களுக்குமே பயன்படும் ஒரு உலகளாவிய பொதுமை கொண்ட வழியாக மாற்றி அமைத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரை டார்வினுடன் ஒப்பிட்டால் பகவானை ஐன்ஸ்டீனுடன் ஒப்பிடலாம். ஸ்ரீராமகிருஷ்ணர் மனித சமுதாயத்தின் ஆன்மிகப் பரிணாமத்தை தனது ஆன்மிக எழுச்சியின் சுவைப்பிழிவாய் அளித்தார். பகவானோ அவரே ஒரு ஆன்மிக விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளராகி மெய்ம்மையின் ஆழ்ந்த பரிணாமத்தைத் தாமே புதிதாய்க் கண்டுபிடித்து, நமக்காக 'ஆத்ம விசாரம்' என்னும் வழிமுறையைச் செம்மைப்படுத்தித் தந்தார். இதைப் பின்பற்றுவதன் மூலம் அனைவரும் அவரது ஆன்மிகப் பரிசோதனைகளைத் தாமே செய்து தமது நேர் அனுபவத்தின் மூலம் அவர் வெளிக்கொணர்ந்து சத்யத்தை உணர முடியும்.

எப்படி ஸ்ரீராமகிருஷ்ணர் வங்காள கலாசாரத்தின் உணர்ச்சிபூர்வமான எழுச்சயின் பிரதிபலனோ, எப்படி மகாத்மா காந்தி குஜராத்தி கலாசாரத்தின் நடைமுறைப் பண்பின் உருவகமோ, ஸ்ரீரமண மகரிஷியும் துல்யமான திட்பம் கொண்ட தமிழ்க் கலாசாரத்தின் பிரதிநிதி ஆவார்.

ஒரு ஜீவன்முக்தனின் லோகாயதத் தொடர்பு அற்ற பங்கேற்பு, உலக நடைமுறையில் ஒரு புனிதத்தைக் கொணர்கிறது. நம்மைப்போல் இன்னும் மாயையைச் சார்ந்து இருப்பவர்க்கும், ஜீவன்முக்தனின் வாழ்வு இறை வியவஹாரத்திற்கும், பாரமார்த்திகத்திற்கும் இடையே தொடர்பை ஏற்படுத்திக் காட்டுகிறது. இது ஆத்மானுபவத்தில் அனைவருமே ஒன்றே என்ற அனுபவத்தை நமக்கு அளித்து, அதை எப்பாரும் அனுபவிக்க முடியும் என்ற உறுதியை நமக்கு அளிக்கிறது.

கனவு காண்பவனும், கனவு அனுபவமும் ஒன்றே; கனவு என்பது காண்பவனுடன் உள்ளது. காண்பவன் கனாவில் இல்லை என்ற பேருண்மையை அது காட்டுகிறது. ஒரு ஞானியால் எந்தச் செயலிலும் தன்னை முற்றிலும் ஒன்றிக் கொள்ளாமலும் தான்தான் செயலாற்றுபவன் என்ற எண்ணம் கொள்ளாமலும் காட்சி பாவத்திலேயே எச்செயலையும் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதையும் நாம் அறிய முடியும். ஏதோ ஒரு சக்தி ஞானிக்குள் புகுந்து செயலைச் சிறப்புறச் செய்ய வைக்கிறது. ஞான வடிவாகவே ஜீவன்முக்தன் நம்முடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறான். எல்லா உயிர்களிலும் உள்ளுறை விழிப்புணர்வாகி அவன் உறைகிறான்.

கபாலி சாஸ்திரி கூறுகிறார்: "உலக ஞானியரின் வரலாற்றில் மகரிஷி ஒரு தனிப்பட்ட ஸ்தானத்தை வகிக்கிறார். ஞானியர் சரித்திரத்தில் வேறு எவருமே இவர் போல் ஞானம் பெற்றபின் ஒரே இடத்தில் 54 ஆண்டுகள் இருந்துகொண்டு உலக முழுதும் தனது ஞானக் கதிர்களைப் பரப்பி, எந்நேரத்திலும் எவருக்கும் ஞான விழிப்புக்கான வழிகாட்டுபவர் இருந்ததில்லை."

காஞ்சி மகாஸ்வாமியும் பரமாசார்யாளுமான சந்திரசேகர சரஸ்வதி கூறுகிறார்: "எந்த சமயமுமே தமது தத்துவத்தை மட்டுமே வைத்துக்கொண்டு பரவுவதில்லை. உள்ளுறைத் தத்துவங்களைப் பற்றி சாமான்யர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. ஒப்பற்ற நற்பண்புகளும் சீர்மிக்க நடத்தையும் பேரமைதியும் காருண்யமும் கொண்ட ஒருவன் அவதரிக்கும்போது அவனைக் கண்ணுற்ற மாத்திரத்தில் மக்கள் அவனை நம்பத் தொடங்கி விடுகின்றனர். அத்தகைய மனிதன் எடுத்துரைக்கும் தத்துவம் சத்யமான ஒன்றாய் இருக்கும் என்ற திட நம்பிக்கையுடன் அவனது உபதேசத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதேசமயம், எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும்

*அதனை எடுத்துரைப்பவர் நடத்தை நல்லதாக இல்லாவிடில் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பகவான் ரமணர் தனது ஒவ்வொரு உபதேசத்திற்கும் உதாரண புருஷராக, தன் ஒவ்வொரு செயலிலும் அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வழிநடத்தியதால் அவரது உபதேசமும் உலகமுழுதும் பரவியது."*

*அலகாபாத் பல்கலைக்கழகத்தின் தத்துவப் பேராசிரியர் Dr. ஹஂஃபீஸ் சையது கூறுகிறார்: "அவரது தெளிவான வார்த்தை ஜாலங்களற்ற தத்துவம் அவரது தினசரி வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் பிரதிபலித்தது. அது வாழ்வின் சிரமங்கட்கு திறவுகோலாகத் திகழ்ந்தது. ஒரு யதார்த்தமான வழியில் மிகச் சிக்கலான சமுதாய, அரசியல் சார்ந்த, சமய மற்றும் பொருளாதார பிரச்சினைகட்கு அவரது உபதேசம் விடை பகர்கிறது. அருணாசல மகரிஷி கடுமையான கோட்பாடுகளைத் தருபவரோ, சமயத்தினைப் பரப்புபவரோ, புரட்சியாளரோ அல்லர். அவர் உண்மையில் ஓர் ஆன்மிக விஞ்ஞானி. ஆய்ந்தறிவைத் தம்முள் அடக்கிய உள்ளுணர்வைத் துணைக்கொண்டு, நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றை அறிந்து சத்யத்தை நிலைநாட்டும் ஓர் ஒப்பற்ற ஆத்மிக விஞ்ஞானி பகவான்.*

*ஒரு இனத்திற்கோ, தேசத்திற்கோ மட்டுமின்றி, ஒரு விஞ்ஞானி இந்த அகிலம் முழுவதற்கும் பயன்படுமாறு ஒரு பேருண்மையைக் கண்டறிகிறான். இந்தப் பேருண்மையை அவன் பாகுபாடின்றி அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கிறான். தாம் உய்த்துணர்ந்த பேரறிவை பகவான், இந்த அறிவுத் தீபம் பரம்பரரை பரம்பரையாக அனைவருக்கும் சென்று அடையுமாறு அளித்துள்ளார்.*

*ஆத்ம விசாரம் என்னும் இத்தீபம் என்பது என்ன? வேதாந்தத்தின் மையக் கருத்தானது, நாம் தூய பிரக்ஞை உணர்வு என்னும் சச்சிதாநந்தமே. ஆயினும் நாம்*

நமது தவறான கொள்கையால் நம்மை உடலுடனும் மனத்துடனும் ஒன்றுபடுத்திக் கொண்டு நம்மை நாமே அறியாமைச் சங்கிலிகளால் கட்டுப்படுத்திக் கொள்கிறோம். இந்தத் தவறுக்கு மூலகாரணம் நமது அஹங்காரமே. அஹங்காரம் என்பது உண்மையில் எண்ணக் குவியல்கள்தான் என்றும், அதன் மூலம் 'நான்' என்னும் தன்முனைப்பே என்றும் தெளிவுபடுத்துகிறார். ஆழ்ந்த உறக்கத்தில் நாம் தன்முனைப்பு அற்று, எண்ணங்கள் அற்று ஆனந்த உணர்வுடன் இருக்கிறோம். இந்தப் பேரானந்த உணர்வை எந்தப் பேரிடரும், வலியும் பாதிப்பதில்லை. நாம் விழித்தெழுந்த மறுகணமே நமக்கு எழும் முதல் எண்ணம் 'நான்' என்னும் எண்ணம்தான். நாம் நம்மை நாமே 'நான் Dr. ரமணன்' என்று அடையாளப்படுத்திக் கொள்கிறோம். மறுகணமே அலைஅலையான எண்ணங்ள் நம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. 'நான் டெல்லியில் இருக்கிறேன்' 'நான் இன்று மாலை ஒரு சொற்பொழிவை நிகழ்த்த வேண்டும்' என்றெல்லாம் தொடர்ச்சியாக எண்ணத் துவங்குகிறோம். நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போது இந்த எண்ண அலைகட்கு எல்லாம் பொதுவாய் இருப்பது 'நான்' என்னும் எண்ணந்தான். இந்த 'நான்' என்னும் அடிப்படை எண்ணத்தைப் பிடித்து, அது தொடர்ந்து எழும் மற்ற எல்லா எண்ணங்கட்கும் ஏற்படுத்தி உள்ள தொடர்பை அறுத்தெறி என்கிறார் பகவான். இதைச் செய்து முடித்தபின், நம்மை அவர் மெய்யான சாந்த உணர்வான 'நான்' என்பது எங்கே எழுகின்றது என்பதைத் தேடி, அது தூய்மையான ஆனந்தத்துக்கும் பேரமைதிக்கும் இருப்பிடமான இருதயம் என்பதை அறிவாய் என்கிறார்.

'ஹ்ருதய வித்யா' என்று மகுடம் இடப்பட்ட ரமண கீதையின் ஐந்தாவது அத்யாயத்தில் பகவான் கூறுகிறார்: "இங்கே கூறப்படுவது மார்பின் இடதுபுறம் இருக்கும் பௌதிக இதயம் அல்ல. நாம் விவரிக்கும் இந்த ஆன்மிக இதயம் மார்பின் வலப்புறம் உள்ளது.

*இங்கிருந்துதான் 'நான்' என்னும் அடிப்படை எண்ணமும் மற்ற எண்ணங்களும் எழுகின்றன.*

*"இந்த அண்டம் முழுவதுமே இந்த உடலில் அடங்கி உள்ளது. இந்த உடல் முழுவதுமே இதயத்தில் அடங்கி உள்ளது. சூரியன் சந்திரனுக்கு ஒளி வழங்குவதுபோல் இதயம் மனதிற்கு ஒளியூட்டுகிறது. ஆன்மிக இதயத்தை உணராத ஒருவன், சூரியன் மறைந்த சமயத்தில், சந்திரன் ஒளியின் மூலம் இரவில் பொருட்களைக் காண்பதுபோல் மனதில் மட்டுமே மனிதன் காண்கிறான்.*

*"ஒளியின் உண்மையான மூலம் தன்னுடைய ஆன்மாவே என்பதை அறியாமல், எண்ணக் குளியலான மனதின் துணை கொண்டு மட்டுமே உலகினைத் தன்னிலிருந்து வேறாகக் கருதிக்கொண்டு, மூடமனதில் மாயையில் ஆழ்ந்து குழம்புகிறான். எப்போதும் ஆன்மாவிலேயே ஆழ்ந்துள்ள ஞானி, மனதின் ஒளியே இதயத்தின் ஒளியில், நிலவொளி பகல் நேரத்தில் சூரிய ஒளியில் கரைந்துள்ளது போன்று கரைந்துள்ளது எனக் காண்கிறான். காண்பான் ஒருவன் காண்பொருளில் இருந்து வேறுபட்டவன் என்பது மனதின் கற்பனையான உருவாக்கமே. ஆன்மிக இதயத்தில் ஒன்றிருப்போருக்கு காண்பானும், காண்பொருளும் ஒன்றே என்பதை ஆத்மாவில் ஆழ்பவன் அறிகிறான்."*

*பகவான் இது நிகழ்வதைக் காவ்யகண்ட கணபதி முனிக்கு விளக்குகிறார்: "ஒருவன் தன்னுள் ஆழ்ந்து நோக்கினால், 'நான் என்னும் எண்ணம் எங்கிருந்து எழுகின்றது' என்று ஆராய்ந்தால் மனது அதிலேயே ஆழ்ந்து கரைகிறது. அதுவே தவம். ஒரு மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும்போது, எங்கிருந்து அந்த மந்திரத்தின் த்வனி எழுகின்றது என்று கண்டால் மனது அதிலேயே கரைகிறது. அதுவே தவம்."*

உதாரணத்தை இங்கே காண்போமா! நாம் ஏதோ விஷயத்தைப் பற்றி எண்ணிக் கலங்கிக் கொண்டு இருக்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். ஆத்ம விசாரத்தின் நோக்கமாவது: “யார் இங்கே குழப்பத்தில் ஆழ்ந்து இருக்கிறார்?” என்ற கேள்வியின் மூலம் மேலும் ஆழமான குழப்பத்தில் வீழ்வதில் இருந்து நம்மைத் தடுத்துக் காக்கிறது. “யார் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளார்?” என்ற கேள்வியின் விடை ‘நான்’ என்பதுதான். அதைத் தொடர்ந்து ‘நான் யார்?’ என்று விசாரம் தொடர்கிறது. நாம் நமக்கே ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். நான் ஆத்மா எனும் பிரக்ஞை உணர்வே. நான் இந்த உடலோ அல்லது மனமோ அல்லேன். இந்த விசாரத்தின் மூலம் நாம் இந்தத் தொடர் ஆய்வின்மூலம் நான் என்னும் சுத்த ஞான நிலையை அடைந்து இறுதியில் இதயத்தைச் சார்கிறோம். இடைவிடாது ஆத்ம விசாரப் பயிற்சியின் மூலம் மனக் குழப்பங்களில் சிக்கி விடாமல் மனதைக் காத்து, எத்தகைய இடையூறுகளையும் அமைதியுடனும், தீரத்துடன் சந்தித்து வென்று கொள்ளும் திறனைப் பெறுகிறோம். மனது பேசுதல், படித்தல் அல்லது வேறு எந்த வேலையைச் செய்துகொண்டு இருந்தாலும், இந்த ‘நான்’ என்னும் நங்கூரத்தில் இருந்து நம் மனம் சற்றும் விலகக் கூடாது.

‘ஆத்ம விசாரணை’ பயிற்சியின் சிறப்பு என்னவெனில் காலதேச வேறுபாடின்றி அமைதியாக, யார் உதவியும் இன்றி எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். எத்தகைய வெளிப்புறக் கிரியைகளின் உதவியும் இதற்குத் தேவையில்லை. ஆத்ம விசாரத்தைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கும்போது, இது நமது திறனையும், உள்ளார்ந்த அமைதியையும் படிப்படியாக உயர்த்திக் கொண்டே வருகிறது என்பதை உணர்வோம். நாம் செய்துகொண்டு இருக்கும் எல்லாச் செயல்களின் ஒரு பகுதியாக ஆத்மவிசாரம் இருக்க முடியும் என்பதை நாம் அறியலாம். எனவேதான் பகவான், “நீங்கள் துறவறம்

பூண்டு ஆன்மிகப் பயிற்சி செய்யுங்கள்” என யாருக்கும் கூறியதில்லை. “துறவறம் பூணுவது என்பது ‘நான் ஒரு கிரஹஸ்தன்’ என்பதற்குப் பதிலாக ‘நான் ஒரு சந்நியாசி’ என்று பேர் மாற்றிக் கொள்வதே ஆகும்” என்கிறார் பகவான். உண்மையில் அத்யாவஸ்ய தேவை எது எனில், ‘நான் இதனைச் செய்துகொண்டு உள்ளேன்’ என்பதை முற்றிலும் துறந்து, ‘நான்’ என்றும் இருப்புணர்வில் மட்டுமே சதா கவனம் செலுத்தி இருப்பதாகும். நாட்டிலோ, காட்டிலோ, எங்கு இருந்தாலும் இந்த ஆத்ம விசாரப் பயிற்சியைச் செய்ய முடியும். உண்மையான துறவு என்பது ‘நான் செயலாற்றுபவன்’ என்னும் தன்முனைப்பைத் துறத்தலே. உலகம் முழுதும் உள்ள சத்ய நாட்டம் கொண்டோர் அனைவரும் வழிகாட்டுவது இந்தத் தத்துவமே. வேதாந்தக் கருத்துக்களை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதங்களில் பரப்ப வந்து இருக்கின்றனர். ஆயினும் பகவான் ஒருவரே மிகத் தெளிவாக, அனைவரும் பின்பற்றக் கூடிய வழியில் வேதாந்தத்தினை சுவைப் பிழிவாகத் தனது உபதேசத்தை அருளி உள்ளார். இதன் மூலம் வேதாந்தக் கருத்துக்கட்கு பகவான் புதிய உயிரோட்டத்தை வழங்கி உள்ளார். வேதாந்தம் என்பது நடைமுறை அனுபவம் சார்ந்த தத்துவக் கோட்பாடுகள் என்பதிலிருந்து மீட்டு நடைமுறையில் பயினும் பேருண்மை என்ற நிலைக்குக் கொணர்ந்தார் பகவான்.

“எவருமே தமது கடமையைச் செய்வதில் இருந்து வழுவக் கூடாது” என்பதில் பகவான் மிக உறுதியாக இருந்தார். அவர் கூறியதெல்லாம் ‘நான் செயலாற்றுபவன் என்ற எண்ணத்தைக் கைவிட்டு விடு; செயலின் விளைவுகளில் பற்றேதும் கொள்ளாதே’ என்பதே யோக வாசிஷ்டம் கூறுகிறது. உன் ஆன்மாவின் மெய்ம்மையின் உனது இதயத்தில் உறுதியாக நிலைநிறுத்தி, உலக அரங்கத்தால் உனது நியமிக்கப்பட்ட செயல்பாடுகளை விளையாட்டுப்போல், பரமார்த்த

*திருஷ்டியைக் கொஞ்சமும் நழுவ விடாமல் உலகப் பற்றுள்ளவனைப் போல் உலகில் விளையாடுவாயக. ஆத்ம சாட்சாத்காரத்திற்கான தேடுதல், முமுட்சுத்வம் உலகின் தீரமான செயல்களுடன் கைகோர்த்துச் செல்கிறது. தர்மத்தை அனுசரிப்பதில் சாதகனுக்கும் ஞானிக்கும் வேறுபாடு ஏதும் இல்லை.*

*இந்த உண்மையை பகவான் தம் வாழ்க்கையிலேயே வாழ்ந்து காட்டினார். அருணாசலத்தில் அவர் 54 ஆண்டுகளில் மக்கள் கூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து எங்ஙனம் ஒரு பூர்ண ஞானி, தான் ப்ரம்மம் என்ற தன்னுடைய பரமார்த்த உண்மையை சற்றும் விடாமல் ஒரு சாமான்ய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். அத்தகைய ஞானிகள் வாழ்ந்தது நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பகவான் பழங்காலத்து ரிஷிகளைப் போல் வாழ்ந்து வந்தவர். உலகம் முழுவதிலிருந்தும் ஆத்மிக சாதகர்கள் பகவானை நாடி வந்தனர். ஆண்களும், பெண்களும் அறிஞர்களும் உழவர்களும் விலங்குகளும் பறவைகளும் கூட அவரை நாடி, தேன்நாடி வரும் வண்டுபோல சூழ்ந்தனர். நான் சமீபத்தில் சந்தித்த ஒரு ஆசார்யர் என்னிடம் கூறினார்: ‘வஸுதைவ குடும்பகம்’ என்ற வேதமுழக்கத்தை ‘ரமண மகரிஷி’ என்ற இரண்டே சொற்களில் விளக்கி விடலாம். நமது ஹிந்து பாரம்பரியம்படி மலை, பூமி போன்ற இயற்கை அனைத்துமே இறைவனின் வெளிப்பாடுகவே. அருணாசலத்தைத் தெய்வமாக வழிபடுவதின்மூலம் பகவான் அருணாசலத்தையே இறையுருவாகக் காட்டியவர்.*

*பகவான் தன்னுடைய பௌதிக உருவில் வாழ்ந்த காலத்தைக் காட்டிலும் இன்று பகவானின் சாட்சாத்காரத்தை நாம் இன்றும் தீவிரமாக உணர்கிறோம். நாம் தினந்தோறும் பல்வேறு இனங்களையும், சமயங்களையும் சார்ந்த - சிரியா, துருக்கி, இஸ்ரேல்,*

சீனா, இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களையும் சார்ந்தவர்கள் மற்றும் பலர் ஆஸ்ரமத்தில் வந்து குழுமுவதைக் காண்கிறோம். நமது ஆஸ்ரமத்தில் மயில்கள், பசுக்கள், குரங்குகள் அனைத்துமே ஒன்றையொன்று மனிதருடன் இணைந்து வாழ்கின்றன. பல்வேறு வகை சார்ந்த பறவைகளும், விலங்குகளும் சமத்துவமாக ஒன்றுகூடி வாழ்ந்து வால்மீகி இராமாயணத்தின் பஞ்சவடியை நினைவூட்டுகிறது. இதுதான் பகவானின் இயைந்த பாரம்பர்யம். பகவானின் உபதேசங்களை அரைகுறையாகப் பின்பற்றினால்கூட அது இணையற்ற அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கிறது. தம்மை நாடிவரும் அனைவருக்கும் வழிகாட்டும் இணையற்ற குருவாக பகவான் இங்கே இணையற்று வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

இறுதியாக...

பகவான் ரமண மகரிஷி பாரதத்தின் தேசிய எழுச்சிக்கும் பாரதத்தின் ஆன்மிக பாரம்பர்ய மறுமலர்ச்சிக்கும் சிறப்பான ஊக்கி சக்தியாக விளங்கினார். அவரது சில குறிப்பிட்ட நன்கொடைகளை இங்கே நினைவுகூறலாம்.

1. ஆன்மிக மறுமலர்ச்சி: பகவான் ரமண மகரிஷியின் உபதேசங்களும், சாந்நித்தியமும் பெருவாரியான மனிதர்களின் ஆன்மிக எழுச்சியில் சிறந்த பங்கு வகித்தன. விசார மார்க்கத்திற்கு அவர் அளித்த முக்கியத்துவமும், ஆத்மிக நேரடி அனுபவம் பற்றிய அவரது வழிகாட்டுதலும், பல்வேறு துறைகளில் இருந்து வந்த சாதகர்கட்கு ஆன்மிக எழுச்சியை உண்டாக்கின.

2. அத்வைத வேதாந்தம்: அவரது உபதேசம் வெறும் நூற்படிப்பல்ல. ஞானத்தின் பேருண்மையை நேருக்குநேர் அனுபவித்த அவரது மார்க்கமே அத்வைத வேதாந்தத்தில் வேர்கொண்டது. ஜீவனும், பரமனும் வேறுபாடற்ற ஒன்றே என்ற அவரது அத்வைத பரமான

உபதேசங்கள், காலங்கடந்து வந்து அறிஞர்களையும், சாதகர்களையும் உலகமுழுதும நெறிப் படுத்தி வருகின்றன.

3. உலகளாவிய உபதேசம்: பகவானின் உபதேசங்கள் சமயம் மற்றும் கலாசார எல்லைகளைக் கடந்தவை. எல்லா சமயக்ளும் ஒன்றானவையே. ஆன்மிக ஞானம் அனைவருக்கும் பொதுவான ஒன்று என்பதை வலியுறுத்துபவை. அவரது உபதேசங்கள் அன்பு, கருணை, வேறுபாடு நீத்த புரிதல் உணர்வு, வெவ்வேறு இனத்தைச் சார்ந்தோர் இடையே நல்லிணக்கம் அனைத்தையும் அவரது உபதேசங்கள் மக்களிடையே வேர் கொள்ள வைத்தன. ஏனெனில் அனைத்துமே ஆத்மாவை அன்றி வேறல்ல என்பதே அவரது அடிப்படை உபதேசம்.

4. ஸ்ரீ ரமணாச்ரம ஸ்தாபனம்: உலகமுழுதும் ஆன்மிகத் தேடலால் உந்தப்படும் சாதகர் அனைவரையும் ஈர்க்கும் மையமாகத் திகழும் ஸ்ரீரமணாச்ரமம் பகவானின் இருப்பிடத்தைச் சுற்றி திருவருணையில் தோன்றியது. பகவானின் உயிர்த் துடிப்போடு மிளிரும் ஸ்ரீரமணாச்ரமம் ஞான சாதனை, கற்றல் மற்றும் தியான நெறி ஆகியவற்றின் கேந்திரமாக நாளுக்குநாள் வளர்ந்து திகழ்கிறது.

5. ஆச்ரம பதிப்புகள்: பகவானின் உபதேசம் முற்றிலுமே எதிர்கால சந்ததியினர்க்காக பதிக்கப்பட்டு ஆஸ்ரமத்தினால் வெளியிடப்படுகின்றன. பல்வேறு இந்திய மற்றும் உலக மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஞானத்தேடல் கொண்ட அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அவை சேவை புரிகின்றன.

6. ஞானாசிரியர் மீது பகவானின் உபதேசங்களின் தாக்கம்: ரமண மகரிஷியின் உபதேசங்கள் எண்ணற்ற ஞானாசிரியர்கள் மற்றும் அறிஞர்மீது ஆழ்ந்த ஆன்மிக விளைவை ஏற்படுத்தி உள்ளன. இன்றும்கூட அவரது உபதேசங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி

*வருகின்றன. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் காந்திஜியைப் பற்றிக் கூறுகிறார்: "இத்தகைய ஒரு மாமனிதன் பௌதிக உருவில் நம்மிடையே உலவி வந்தது என்பதை எதிர்கால சந்ததியினால் நம்பவே முடியாது." இருபதாம் நூற்றாண்டிலே அங்ஙனம் நம்மிடையே மாந்தருக்குள் ஒரு தெய்வமாய் உலவி வந்தவர் பகவான்.*

*இக்காலம் செயற்கை நுண்ணறிவின் காலம். எல்லா விவாதங்களும் AI சுற்றியே நிகழ்கின்றன. இதைக் கருத்தில்கொண்டே இன்றைய சொற்பொழிவை முடிவு செய்கிறேன். இன்றைய கலந்துரையாடலின் தலைப்பு "தேசிய எழுச்சிக்கும், பாரதத்தின் ஆன்மிக பாரம்பர்யத்திற்கும் ரமண மகரிஷியின் பங்கு" என்பதாம்.*

*அருணாசலமும், இந்தியாவும் (A.I) பகவான் பாரத மறுமலர்ச்சிக்கு அளித்த நன்கொடையைக் குறிப்பிடுகிறது. பகவான் அருணாசலத்தில் காலடிவைத்த நாள் முதலாய் இந்தியாவின் தேசிய, கலாசார, மறுமலர்ச்சி துவங்கியது. நாம் அனைவரும் A.I. ஆத்ம ஞானம் மற்றும் 'நான்' என்னும் தூய உள்ளுணர்வு - இரண்டையும் நமது தன்முனைப்பை முற்றிலும் களைந்து, உலகளாவிய ப்ரக்ஞை உணர்வில் நிலை பெறுவோமாக என்பதே எனது பிரார்த்தனை.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2024

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 24 | புதன் | இரவு 10.44 | 25 | வியாழன் | இரவு 11.56 |
| பிப்ரவரி | 23 | வெள்ளி | மாலை 4.55 | 24 | சனி | மாலை 6.51 |
| மார்ச் | 24 | ஞாயிறு | காலை 11.17 | 25 | திங்கள் | பகல் 01.16 |
| ஏப்ரல் | 23 | செவ்வாய் | காலை 4.21 | 24 | புதன் | காலை 5.54 |

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹறன்

### *22. அங்கியில் பஞ்சு*

*குறள் 217: இமையாத நாட்டத்து இருந்துஉணர் வார்க்கு*
*அமையாத ஆனந்த மாம்.*

*பொருள்: 'இமையாத நாட்டம்' என்பது எண்ண அலைகளற்ற மனத்தைக் குறிக்கிறது. மனதை அலைபாயாமல் தனது ஆத்மிக நோக்கிலேயே நிலைநிறுத்தி, ஆத்ம விசாரம் செய்வோர்க்கு எப்போதும் சச்சிதாநந்தம் நிலையாய் இருக்கும்.*

*விளக்கம்: இதே கருத்தை,*

*'மாற்ற மனம் கழிய நின்ற மறையோன்' என்று சிவபுராணத்தில் மணிவாசகர் குறிப்பிடுகிறார்.*

*திருமந்திரத்திலும் இதே கருத்து,*

*பூட்டுஒத்து மெய்யில் பொறிப்பட்ட வாயுவைத்*
*தேட்டுஅற்ற அந்நிலம் சேரும் படிவைத்து*
*நாட்டத்தை மீட்டு நயனத்து இருப்பார்க்குத்*
*தோட்டத்து மாம்பழம் தூங்கலும் ஆமே.*

*இதன் பொருளாவது: கிணற்றில் தண்ணீர் இறைக்கும் இராட்டினம்போல் உடலில் மேலும் கீழுமாய்ப் போகும் வாயுவை அகமுகப்படுத்தி, பொருந்தச் செய்து வேறு எதையும் தேடாது, எப்போதும் ஆன்மிக விழிப்புடன் ஆத்ம விசாரம் செய்வோர்,*

*சிவஞானமாகிய கனியை அடைந்து, எண்ண அலைகளை விட்டு, இறைவனுடனேயே எப்போதும் பொருந்தி இருப்பர்.*

*குறள் 218: துரியம் கடந்த சுடரொளியைக் கண்டால்*
*மரணம் பிறப்பில்லை வீடு.*

***பொருள்:*** *ஜீவன் உற்பத்தி, லயம், மரணம் என்னும் சுழலிலேயே சிக்கித் தொல்லை உறுகின்றது. யோகம் மற்றும் ஆன்ம விசாரம் இவற்றின் மூலம் ஜாக்ரத், ஸ்வப்னம், சுஷுப்தி ஆகிய உடலுடன் கூடிய மூன்று நிலைகளையும், உடலையும், மனத்தையும் தாண்டிய துரிய நிலையையும் கடந்து சென்றால் 'துரியாதீதம்' என்ற இறுதி நிலையில் பரமாத்மாவாகிய பேரொளியைக் கண்டால், இந்த சம்சார சுழலில் இருந்து முற்றிலும் விடுபட்டு பரத்துடன் ஒன்றி இருக்கலாம்.*

*குறள் 219: மதிபோல் உடம்பினை மாசற நோக்கில்*
*விதிபோல் அகல விடும்.*

***பொருள்:*** *'மதி' என்பது இடது நாசியின் வழியால் வரும் சுவாசம், 16 அங்குலம் ஓடக்கூடிய சந்திரகலை எனப்படும் இடது சுவாசத்தை பிராணாயாமத்தில் சுருக்கி இதயத்தில் பரிணமிக்க நமக்குப் பிறவியில் விதிக்கப்பட்டுள்ள கால அளவுகளைக் கடக்கலாம். இதையே பழமொழியில் 'விதியை மதியால் வெல்லலாம்' என்று குறிப்பிடுகின்றனர். சந்திர கலையைச் சுருக்கும்போது விதிக் கணக்கு வெல்லப் படுகிறது.*

*குறள் 220: சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்*
*பாவ நசிக்கும் பரிந்து.*

***பொருள்:*** *உயிரினை ஜீவபாவம் இன்றி, சிவனாகவே கருதி, சிவபாவத்துடன் இறைவனாகவே காணும்போது நமது பாவங்கள் அனைத்தும் நசித்து விடும்.*

***விளக்கம்:*** *இதே கருத்தினை திருமூலர் திருமந்திரத்தில் விரிவாக விளக்குகிறார்.*

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலம் ஐந்தும் காளா மணிவிளக்கே. (1823)*

நமது உடம்பே ஆலயம். நமது உள்ளம் இறைவன் இருக்கும் கருவறை. பரம்பொருளே சென்று வழிபடும் வாசலாக விளங்குவது நம் வாய். அறியாமை இருள் அகன்று தெளிவான மனநிலை வாய்க்கப்பட்டவர்கட்கு அவர்தம் உயிரே வழிபட்டு வணங்கத்தக்க சிவலிங்கம். இந்த ஞானத்தை அறிந்து வழிபடுவோர்க்கு, கண், மூக்கு, வாய், செவி, உடல் ஆகிய வழக்கமாக நம்மை ஆசை மயக்கத்தில் ஈடுபடுத்தி அழிய வைக்கும் ஐம்புலன்களுமே பரிணாமம் அடைந்து இவ் வாலயத்தின் ஒளி வீசுகின்ற தீபங்களாய்த் திகழும். சிவபுராணத்திலும், மணிவாசகர் இறைவனை 'கள்ளக் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே' என்று வணங்குகிறார்.

## 23. மெய்யகம்

குறள் 221: மெய்யகத்தின் உள்ளே விளங்கும் சுடர்நோக்கில்
கையகத்தில் நெல்லிக் கனி.

பொருள்: பரமார்த்திக சத்யத்தை நாடும் நெஞ்சத்தின் உள்ளே விளங்கும் ஆன்ம ஜோதியை வேறு எண்ணம் ஏதும் இல்லாது இடையறாது நோக்கினார், சிவஞானம் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கித் தெரியும்.

விளக்கம்:

*மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்*
*கைத்தலம் சேர்தரு நெல்லிக் கனியொக்கும்*
*சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்*
*அத்தனை நாடி அமைந் தொழிந் தேனே. (2992)*

என்று இந்தக் கருத்தைத் திருமூலர் விளக்குகிறார்.

“மெய்த்தவத்தின் பயனை அருளும் கர்மபலதாதா சிவபிரானே. சிவயோகத்தை விரும்பிச் செய்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பரம ஞானத்தை குருநாதன் அருளுவான். அவன் தூய்மையே வடிவானவன். தூய்மையான அறநெறியைக் கடைப்பிடித்து வாழும் தேவர்கட்கு அவனே தந்தை போன்றவன். அத்தகு சிறப்பு வாய்ந்த இறைவனான சிவபெருமானை நான் தினமும் நாடிச் சென்று தொழுகின்றேன்” என்கிறார் திருமூலர்.

குறள் 222: கரையற்ற செல்வத்தைக் காணும் காலத்தில்
உரையற்று இருப்பது உணர்வு.

பொருள்: பௌதிகமான செல்வங்கள் அனைத்திற்கும் ஓத எல்லையும் வரம்பும் இருக்கும். வரம்பும் முடிவும் இல்லாத ஒரே செல்வம் இறைவனின் அருட்செல்வமே. அந்தப் பரம்பொருளை எமது உள்ளுணர்வால் உய்த்து அறியும்போது, பேச்சு, செயல் போன்ற பௌதிகச் செயல்கட்கு இடமே இல்லை. நினைக்கவும், பேசவும் ஒன்றும் இருக்காது. எல்லையற்ற மௌனமே அங்கு நிலவும்.

குறள் 223: உண்டு பசிதீர்ந் தார்போல் உடம்பெல்லாஅங்
கண்டுகொள் காதல் மிகும்.

பொருள்: அதிகமான பசியில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்த ஒருவ சுவை மிகுந்த உணவைக் கண்டு உண்டபின் பசியாறி மனநிறைவை அடைகிறான். அதுபோன்றே உலக உயிர்கட்கு எல்லாம் பேரன்பு சுரந்து, மனம் முழுவதும் முழு வையகத்தின் மீது கொண்ட பேரன்பு நிறையும் தருணத்தை உணர்ந்து கொள். (அதுவே நீ பரிபூர்ண நிலை அடையும் தருணம்).

குறள் 224: உரைசெயும் ஓசை உரைசெய் பவர்க்கு
நரைதிரை இல்லை நமன்.

பொருள்: அனைத்துப் படைப்பிற்கும் மூல காரணமாய்த் திகழ்வது ‘ஓம்’ என்னும் ப்ரணவமே. இந்தப்

பிரணவம் வெறும் சொல் அல்ல. வேதாந்தபூர்வமாக ஆழ்ந்த நுண்பொருளை உள்ளடக்கியது இந்தப் பிரணவம். இந்தப் பிரணவத்தை சதா தியானித்துஅதன் உட்பொருளை ஆழ்ந்து அறிபவர்க்கு நரை, திரை, மரணம் எதுவுமே அற்ற ‘மரணமில்லாப் பெருவாழ்வு’ சித்திக்கும்.

ஞானவாசிட்டம் பகர்கிறது.

“பிரணவத்தின் உச்சாரண முடிவில் பிறந்த
சொல்லூறுமுண்மை
விரவு நாட்டத்தால் துயில்பவன் உணர்வுதான்
வெளிப்படில் உயிர் நிற்கும்”

நீங்கார ப்ரணவ ஜபத்தின் முடிவில் அதன் மெய்ப்பொருள் வெளிப்படும். பரமார்த்த சத்யத்தை நாடி ஆத்ம சாதனையில் ஈடுபட்டு அறிதுயில் கொள்பவன் உள்ளத்தை ஆத்ம சாட்சாத்காரம் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும் என்கிறார் முனிவர்.

குறள் 225: தோன்றாத தூயஒளி தோன்றியக்கால் உன்னைத்
தோன்றாமல் காப்பது அறிவு.

பொருள்: ஞானசாதனை முற்றுப் பெறாத வரையில் தஹராகாசத்தில் உள்ள ஆன்மா வெளிப்பட்டுத் தோன்றாது. ஆத்ம சாதனை முழுமை அடையும்போது ஆன்ம ஒளி வெளிப்பட்டுப் பிரகாசிக்கிறது. அப்போது மீண்டும் எண்ணங்கள் தோன்றி ஆன்ம ஒளியை மறைக்காத வண்ணம் சத்குருவின் அருளால் பொலியும் ஞானம், சாதகனைக் காக்கின்றது.

குறள் 226: வாக்கு மனமும் இறந்த பொருள்காணில்
ஆக்கைக்கு அழிவில்லை யாம்.

பொருள்: இங்கு கணாத முனிவரின் வைசேஷிகத் தத்துவக் கருத்து கூறப்படுகிறது. பேச்சும் மனமும் இல்லாத தனது ஸ்வரூப நிலையை (இயல்பான நிலையை) உணர்ந்தால், மரணமில்லாப் பெருவாழ்வு எய்திடலாம் என்று வழிகாட்டுகிறார் ஆசிரியர்.

பகவான் ரமணரின் 'உள்ளது நாற்பது' மங்கல வெண்பா இக்கருத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது.

**உள்ளதலது உள்ளஉணர்வு உள்ளதோ உள்ளபொருள்**
**உள்ளல்அற உள்ளத்தே உள்ளதால் - உள்ளம்எனும்**
**உள்ளபொருள் உள்ளல்எவன் உள்ளத்தே உள்ளபடி**
**உள்ளதே உள்ளல் உணர்.**

இதன் ஆழ்பொருளாவது: "உள்ளதாகிய மெய்ப் பொருள் இருந்தாலன்றி, 'இருக்கின்றோம்' என்ற இருப்புணர்வு தோன்றுமா? அது எண்ணங்கள் யாதுமற்ற இதயத்தே இருப்பதால், அந்த உண்மைப் பொருளைத் தியானிப்பது எங்ஙனம்? அது உள்ளத்தே எவ்வாறு உள்ளதோ அவ்வாறு நாம் இதயத்தில் ஒன்றி இருப்பதே அதைத் தியானிப்பதாகும் என்று உணர்வாயாக" என்று தெளிவாக வழிகாட்டுகிறார் பகவான்.

குறள் 227: கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.

பொருள்: உன் இதயத்தே பரமாத்மாவாய் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஆத்மப் பேரொளி விசாரம் மூலம் 'நான் யார்?' என அறிந்தோனுக்கு, ஞானக் கண் திறக்கப்பட்டு ஞான ஒளியாய் வெளிப்படுகிறது. இந்த ஞானப் பிரகாசம் பேரானந்தத்தைத் தருகிறது.

குறள் 228: ஆநந்த மான அருளை அறிந்தபின்
தான்அந்த மாகும் அவர்க்கு.

பொருள்: ஆநந்த ஸ்வரூபமான இந்த அருள் ஒளியை உணர்ந்தபின் அதுவே சாதகனின் பௌதிகம் கடந்த இறுதிநிலை. அங்கே சொல், செயல் ஒன்றுமே இல்லை.

விளக்கம்: இதனை பகவான் மிகத் தெளிவாக உபதேச உந்தியாரில் விளக்குகிறார்.

மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை உந்தீபற
தன்னியல் சார்ந்தனன் உந்தீபற (15)

'நான் யார்' என்னும் இடையறாத விசாரணையால் மனம் தன் உருவை இழந்து அழிகின்றது. மனம் அழிந்தபின், இதன் மெய்ப்பொருளில் தானாய்க் கரைந்து தன்னிலையில் தானே ஒடுங்குவதே யோகத்தின் இறுதிநிலை. அந்நிலை அடைந்தபின் தனக்கென்று செய்ய வேண்டிய செயல் எதுவுமே தேவையில்லை. அவன் தன் பரிபூர்ண மெய்ந்நிலையை அடைந்து விடுகிறான். ஸ்ர்வ கர்மங்களில் இருந்தும் அவன் விடுபட்டவன் ஆகிறான்.

ஆன்ம வித்தைக் கீர்த்தனத்திலும் பகவான் இதே கருத்தை அறிவுறுத்துகிறார்.

சொன்மா னததனுவின் கன்மாதி சிறிதின்றிச்
சும்மா அமர்ந்திருக்க அம்மா அகத்தில்ஆன்ம
சோதியே; நிதானு பூதியே; இராது பீதியே
இன்பஅம் போதியே. (4)

குறள் 229: மறவாமல் காணும் வகையுணர் வாருக்கு
இறவா திருக்கலும் ஆம்.

பொருள்: தனது உண்மை ஸ்வரூபமான 'நானே பிரம்மம்' என்பதை மறத்தலாகிய தவறை ஒழித்து, நித்யாநித்ய விவேகத்தின் மூலம் பகுத்துணர்வை அறிந்தவர்க்கு மரணமில்லாப் பெருவாழ்வு கிட்டுகிறது.

பொருள்: மஹாபாரதத்தில் வரும் மிக முக்கிய வேதாந்தப் பகுதியான 'ஸநத் ஸுஜாதீய'த்தில் 'மரணம் என்றால் என்ன?' என்ற திருதராஷ்டிரனின் கேள்விக்கு,

"தான் உண்மையில் யார் என்பதை மறத்தலே மரணம். தான் உடல், மனம் அல்ல; நானே பிரம்மம் என்பதை எப்போதும் இடைவிடாது உணர்வதே நிரந்தரப் பெருவாழ்வு" என்று ஸநத்ஸுஜாதீயர் விளக்குகிறார். இந்தக் கருத்தையே மிகச் சுருக்கமாக, அதே சமயம் மிகத் தெளிவாக ஔவையார் குறளில் பதிவு செய்கிறார்.

*குறள் 230:* ***விண்ணிறைந்து நின்ற பொருளே உடம்பதன்***
***உண்ணிறைந்து நின்ற வொளி.***

***பொருள்:*** *இந்தப் பௌதிக உடம்பில் முழுதும் பரவி நிறைந்து அசைவற்று நிற்கும் அருள் ஒளியே சிதாகாசத்தில் அகண்டப் பரிபூர்ணமாக நிறைந்திறைக்கும் சிவம்.*

***விளக்கம்:*** *இந்தக் கருத்தினை பகவான் மிகத் தெளிவாக 'உள்ளது நாற்பது அனுபந்த'த்தின் 20ஆவது பாடலில் விளக்குகிறார்:*

*இதயமலர்க் குகைஅகமாய் இலகுஇறையே*
*குகேசன்என ஏத்தப் பட்டோன்*
*இதமனைய குகேசன்யான் எனும்ஸோஹம்*
*பாவனைதான் நின் உடம்பில்*
*இதமுறுநான் எனும்திடம்போல் அப்பியாச*
*பலத்தால்அத் தேவாய் நிற்கின்*
*சிதையுடல்நான் எனும்அவித்தை செங்கதிரோன்*
*எதிர்இருள்போல் சிதையும் அன்றே.*

*இதய மலர்க் குகையே தன் இருப்பிடமாய்க் கொண்டு எப்போதும் ஒளிர்பவன் 'குஹேசன்' எனப்படும் பரமாத்மா. அந்த குஹேசனேநான் எனும் 'ஸோஹம்' பாவனையுடன் இடைவிடாமல் பயிற்சி செய்து நீ நின்றாய் எனில், 'இந்த தேஹம்-மனம் இவையே நான் என்னும் தவறான அஞ்ஞானமானது ஞாயிற்றின் முன் இருள்போல உடனே அழியும்.*

*"இந்த அருள் ஒளியே எங்கும் பரவி இருக்கும் சிவம்" என ஔவையார் கூறுகிறார்.*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 31. கடவுள்

*நான் நீண்ட நாட்கள் ஆச்ரமத்தில் தங்கி மௌனத்தை அனுஷ்டித்தபின், இறைவனைப் பற்றிய எண்ணங்கள் என் நெஞ்சத்தில் எழத் துவங்கின.*

*நம்முடைய இளவயதில் நம்மீது திணிக்கப்பட்டு நம்மால் மனப் பதிவு செய்யப்பட்ட மேனாட்டு நம்பிக்கைகள், மாந்தர் உருவம்கொண்டு தோன்றும் பரம்பொருள் போன்ற கருத்துக்கள் - இவை அனைத்தும் நான் இந்தியா வருவதற்கு சில ஆண்டுகள் முன்னமேயே என்னால் கைவிடப்பட்டன. சமயம் சார்ந்த பௌதிக உருவங்கள் தொடர்பான தப்பெண்ணங்களை நான் துறந்து விட்டேன். எனினும் பகவானின் சந்நிதியில் இவற்றைக் கைவிட்டு இருப்பது மட்டுமே போதுமானதாக எனக்குத் தோன்றவில்லை. பகவானின் அருகாமையில் இருக்கும்போது, இறைவனின் இருப்பை நான் சத்யமாக உணர்கிறேன். இதை நிரூபிக்க எந்த விதமான தர்க்கங்களோ, நிரூபணங்களோ தேவையில்லை. எதை மனம் பூர்வமாக உணர முடியவில்லையோ அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இறைவனை அகநிலைப்படியே உணர வேண்டுமே அல்லாது, அவரை நமக்கு வெளியே உள்ள ஒன்றாக அறிய முடியாது என்பதை பகவான் திரும்பத்*

திரும்பக் கூறுவார். இறைவனை நமது இருப்பின் அடியாழத்தே ஆன்மிக அதிர்வாக மட்டுமே உணர இயலும்.

இங்கு ஒரு மகிழ்ச்சியான விஷயம் பகவானின் திருவடிகளில் அமர்ந்து நான் தியானித்து மனக் கதவைத் திறந்து, எண்ணங்கள் அனைத்தையும் துறந்து என்னுள் ஆழ்ந்த தருணத்தில், பகவானின் உபதேசம் என் நினைவுக்கு வந்தது. எல்லா சமயக் கொள்கைகளும், தத்துவ சித்தாந்தங்களும் ஒரு குறிப்பிட்ட இடம் வரைதான் சாதகனை அழைத்துச் செல்லும். எத்தனை முறை பயின்றாலும் திரும்பத் திரும்ப அந்தப் புள்ளிக்கே சாதகன் வந்து சேர்கிறான். இந்த இடத்திலேயே இறைவனைக் குறித்து அவனது உணர்வு-மனம் கற்பிக்கும். இறைவனைப் பற்றிய உருவகங்கள் உருவாகின்ற இந்த நிலையில் எது முக்கியம் என்றால், மெய்யான இறை அனுபவம், இறைமையைத் தன்னுள் உணர்ந்து அனுபவிப்பர்.

நாம் பரம்பொருளை எங்கோ காணமுடியாத உயரத்தில் ஒரு லோகத்தில் வசிப்பதாகவோ, எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாகவோ, அல்லது அனைத்துக்கும் தொடக்கமாகவோ, இந்த அகிலத்தைத் தொடங்கி வைத்த ஆதார சக்தியாகவோ, அல்லது வேறு எந்த விதமான, மனதுக்கே திருப்தி தரும் மனது சார்ந்த சித்தாந்தமாகவோ கருத இயலுவதில்லை.

“நாம் இறைவனை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும் ஆத்மார்த்தமாக அனுபவிக்க வேண்டும். அதாவது முழுமையான மெய்ப்பொருளாகக் கொண்டு அவனுள்ளேயே ஒவ்வொரு கணமும் வாழ வேண்டும்.”

“இறைவன் மட்டுமே நாம் காணும் எல்லாப் பொருளுக்கும் அடிப்படையாகத் திகழும் பேருண்மை” என்று பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.

“கடவுள் உண்மையில் ஒவ்வொரு பொருளிலும் உள்ளார். அவர் ஏதோ ஒரு குறிப்பிட்ட படிமத்திலோ அல்லது தேர்வு செய்யப்பட்ட பௌதிக உருவிலோ மனம் எண்ணத்தில் கொண்டுள்ள உருவத்திலோ, உணர்விலிருந்து முகிழ்க்கும் நிகழ்வுகளிலோ மட்டுமே உறைவதில்லை” என்னும் மிக எளிய உண்மையை மனித மனம் உணர முடிவதில்லை. அந்தப் பரம் மஹரிஷியில் இருப்பதுபோல் நம் அனைவர் உள்ளும் உறைகின்றான். புத்துணர்ச்சி ஊட்டும் மாலைத் தென்றலிலும் மட்டுமின்றி கரிய நிறத்துடன் ஆலயச் சுவரில் இருந்து என்னைக் கடித்துத் தொல்லைப் படுத்தும் கொசுவில்கூட அந்தப் பரம்பொருளே உறைகின்றது. தன்னை நெருங்குபவர் அனைவரையும் கருணையின்று விழுங்கும் கடல்வாழ் விலங்குகள் மட்டுமன்றி, பகவானின் திருவடியில் அமர்ந்து அவன் அருட் பிரவாகத்தைப் பாடும் பக்தர்கள் ஒரே தரமான ப்ராணனையே சுவாசிக்கின்றனர்.

எந்தப் பொருளுமே அவனது உலகளாவிய ப்ரக்ஞையில் இருந்து விடுபட்டு வெளியே இருப்பதில்லை. எல்லாமே இருந்தபடி இருக்கின்றன. அவனது ஆக்ஞையைத் தாண்டியோ, அவனில்லாமலோ எதுவுமே இருக்க முடியாது.

பகவானின் அசைவற்ற அமைதி நிலை, அலைவற்ற சாந்தம் அவரது ஆத்மானுபவத்தில் இருந்து முகிழ்ப்பதல்லவா, ஆம். அது அப்படித்தான் இருக்க வேண்டும்.

இது உண்மையெனின், இந்த உலகத்தில் எதுவுமே எனக்கு அந்நியமாய் இருக்க முடியாது. நான் எப்போதுமே தனித்து விடப்பட மாட்டேன். ‘தனிமை’ என்பதுதான் ஒருவனை மிக அச்சுறுத்தும் ஒன்று. தியானம் செய்யும்போது எனக்குள் ததும்பும் பேரானந்தத்தின் விளக்கத்தை நான் இப்போது

உணர்கிறேன். ஐயத்துக்கே இடமின்றி நம்முடைய ப்ரக்ஞை உணர்வில் மெதுவாக, படிப்படியாக உட்புகும் மரணம் கடந்த நிலையை நான் உணர்கிறேன். இவை அனைத்தும் நான் ஆகில், இவை அனைத்திற்கும் ஆதாரமாகிய ஆன்மிக வாழ்வை நான் எங்ஙனம் இழக்க முடியும்?

வேகவேகமாய் என்னுள் பாய்ந்து வரும் இந்த எண்ணங்கள், சிறிது நேரத்தில் என்னைச் சோர்வடையச் செய்கின்றன. பகவான் திருவடிகளில் சரண் புகுந்த பின்னர், தன்னைத் தானே அடிக்கடி நிரூபணம் செய்து கொள்ள முயல்வதும், இரண்டும் இரண்டும் நான்கு என்பது போன்று இடையறாது ஞாபகப்படுத்திக் கொள்வதும் தேவையா!

வாழ்க்கையை 'வாழ்தல்' என்பதின் முழு அர்த்தத்துடன் நான் வாழ விரும்புகிறேன். பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார். மெய்யான 'வாழ்தல்' என்பது மனம் உருவாக்கும் எல்லாத் தோற்றங்களும் எறியப்பட்டு, எல்லா எண்ணங்களும் அழிக்கப்பட்டு, மெய்யான 'நான்' என்பது மட்டுமே இருக்கும் நிலையில்தான் சித்திக்கிறது.

ஆனால் இந்த 'நான்' என்பது நாம் பௌதிக உலகில் சுட்டுப்பொருளைக் காட்டும் 'நான்' என்பதல்ல. அகண்டமாகிய ப்ராணன் உண்முகமாக ஆத்மாவை நோக்கித் திருப்பப்படும்போது, பௌதிக நிலையில் நாம் சுட்டும் 'ஜீவன்' என்றும் ஒத்தே உதறப்பட்டு உணர்வற்ற நிலையை அடைகிறது.

இந்த ஆத்மிக மெய்யான 'ஆத்மா' என்பது உணர்வற்ற ஜீவனைவிட பல மடங்கு உயர்வானது, பல மடங்கு நுண்ணியது, சர்வ சுதந்திரமானது. அனைத்துமே இந்த பரமாத்மாவில் அடங்கியது. அவனே அனைத்திலும் உள்ளான். அவனே இறைவன்.

இதை நாம் அறியும்போது நம்முடைய முயற்சியே இல்லாமலேயே நாம் காணும் அனைத்திலும் இப்பேருண்மையைக் காண முடிகிறது. அதனுடைய ஆதாரம் இறைவனே என்பதை உணர்கிறோம். பெரும் கவிஞர்கள் மற்றும் ஞானியரின் எழுச்சி மிக்க சொற்களின் உள்ளார்ந்த அர்த்தங்களை உணர்ந்து நமது ஞானக் கண்கள் திறக்கின்றன. இவை அனைத்துக்கும் ஆதாரமாகிய, நம் இதயத்தில் ஆழத்தில் அதிரும் அந்த பரமார்த்திக சத்யத்தை நோக்கி நாம் ஈர்க்கப்படுகிறோம்.

ஓ உலகமே! ஏன் உன்னுடைய பேயை ஒத்த பொய்ம்மை இருப்பில், இறைமையைத் தவிர நாம் நாடித் தேடவேண்டிய குறிக்கோள் வேறு எதுவுமே இருக்க முடியாது என்பதை உணர மறுக்கிறாய்!

பரம்பொருள் மீது நாம் காட்டும் பேரன்பும், பக்தியும் தன்னிச்சையாகவே எழுகின்றன. அங்கே கேள்விகட்கோ, தேடுதலுக்கோ இடமே இல்லை. இதுவே நமது இயற்கையில் எழும் விழிப்புணர்வு. அந்நிலையில் ஒவ்வொன்றும் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கின்றது. அந்தப் பரமனின் ஆணைகள் எப்போதும் உன்னதமானவை. நம்மால் இந்த பெரும் சத்யத்தை உணர முடியவில்லையா, அது அந்தப் பரமார்த்தத்தின் குறைபாடல்ல. சூரியனின் கதிர்கள் எப்போதும் எல்லாவிடத்திலும் ஒளி வீசிக் கொண்டு இருந்தாலும், ஒரு குருடனால் அந்தக் கதிரவனைக் காண முடியவில்லை அல்லவா. கதிரவனைக் காணும் சக்தி மூளையில் இருந்து பிறப்பதல்ல; அது இதயத்திலிருந்து வெளிப்படும் சக்தி இந்தக் 'காணல்' என்பது, இந்த உணரும் ஞானம் நாம் உலகியலில் கண்டறியும் "இதைக் காண்கிறேன், அவன் அங்கே இருக்கிறான்" என்பது போன்ற பௌதிக அறிவு அல்ல. பார்க்கப்போனால் 'இது' 'அது' 'இவன்' 'அவன்' என்கின்ற மனம் சார்ந்த பேதங்கள் பேத உணர்வு

அற்ற நிலையை நமக்கு ஒருமித்த ஞானக் கதிரின் முதல் தரிசனத்தைத் தரும். நாம் இருக்கும் தளத்திற்கு இழுத்து வர முயல்வது ஒரு பயனற்ற வேலை. அதற்குப் பதிலாக நமது குறுகிய ‘நான்’ - அஹங்காரம் - என்பதை விடுத்து அந்த ஞானக் கதிரவனை நோக்கி மேலெழுந்து செல்ல வேண்டும். நான் தரும் இந்த ஒப்புமை ஒழுங்கற்று குறைபாடுகளுடன் இருக்கலாம். எனினும், வாழ்க்கையை வெற்றியுடன் நடத்த நாம் செய்யும் முயற்சியில் எத்தகைய மனப்பாங்குடன் செயல்பட வேண்டும் என்பதை சிறிது விளக்கும் என எண்ணுகிறேன்.

நான் ஒன்று மட்டும் கூற முடியும்.

இறைவனை நாம் அடையச் செய்யும் முயற்சியின் பல்வேறு நிலைகளில் ஒன்று மட்டும் எப்போதும் முழுமையாக இருக்க வேண்டும். ‘சுத்த மௌனம்’ என்பதே அது. இந்த மௌனத்திலேயே இருந்து நாம் பல்வேறு விளக்கங்களையும் பாடங்களையும் கற்கலாம். எனினும் அவை அனைத்துமே முழுமை அடையாத நிலையில் இருக்கும். நாம் செய்ய வேண்டிய சாதனையின் சாரத்தை அது அளிக்காமல் போகலாம். இரண்டாமவர் வாயிலாக அவரது முயற்சிகளையும் அனுபவங்களையும் கேட்டு வழிபெற முயல்வதைக் காட்டிலும் அதற்குப் பதிலாக நாமே நேராக இந்த மௌன சாகரத்தில் மூழ்குவதே அறிவுடைமை. இறைவன் நம்முடன் மௌனத்தின் வழியாகவே பேசுகிறான். நாமோ, இந்த மௌனம் நம்மை, ஆட்கொள்ள அனுமதிப்பதில்லை. நம்முடைய அறியாமை இத்தகைய நேர் தொடர்புக்கு நாம் செல்வதைத் தடுக்கிறது. ‘மௌனம்’ என்பது சலிப்பூட்டும் ஒன்று என நாம் கருதுகிறோம். வாழ்க்கை என்பது பேச்சு இல்லாமல் முழுமை பெறாது என்று நாம் தவறாக எண்ணுகிறோம். நாம் வாழும் இந்த ஓசை மிகுந்த வாழ்க்கை உண்மையில் வாழ்க்கையே அல்ல.

*உண்மையில் இந்த வாழ்க்கை என்பது தினம் நாம் அனுபவிக்கும் பூரணமே! ஏனெனில் மரணம் என்பது எல்லா உருவத் தோற்றங்களின் இறுதியான அழிவு நிலை. ஏனெனில் அது நம்முடைய சிறிய 'நான்' ஆகிய தன்முனைப்பின் முடிவைக் குறிக்கிறது. இந்த உண்மையை நேருக்கு நேர் சந்திக்க விரும்பாமல், கண்களை மூடிக்கொண்டு, தொல்லை தரும் உண்மையினை சந்திக்க விரும்பாமல் தப்பிக்க விழைகிறோம். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடும் என்பதுபோல் இந்தப் பயனற்ற மறுதலிப்பு நம்மை எங்குமே இட்டுச் செல்லாது. ஒரு மரத்தில் இருந்து விழுந்த இலை எப்போதும் மரத்திற்கு மீண்டும் திரும்ப இயலாது. அதுபோல இந்த நிலையற்ற பிறப்பு எப்போதும் நம்முடைய உண்மையான பூரண ஆத்ம தரிசனத்தை வெளிப்படுத்த இயலாது.*

*ஒரு ஞானி கூறியுள்ளார்: "ஒரு மனிதன், கடவுள் மற்றும் சாத்தான் என்ற இரண்டு எஜமானர்கட்கு ஒரே சமயத்தில் சேவை செய்ய இயலாது."*

*ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடும்போது நம்முடைய தினசரி வாழ்வின் நிகழ்ச்சிகளில் கூட கடவுளின் கருணைக் கரங்கள் வழிநடத்துவதைக் காணலாம். இதுவரை நாம் கண்டிராத விஷயங்கள் கண்கூடாகத் தெரிய வருகின்றன. நமது இதயங்கள் எல்லையற்ற பக்தியாலும், அன்பினாலும் நன்றியறிதலாலும் நிரப்பப் பெறுகின்றன. மகரிஷி கூறுகின்ற "கடவுளுடன் தினம் நிகழும் நேரடித் தொடர்பு என்ற கட்டத்தை நாம் நெருங்குகின்றோம். இதுவே நமது குறிக்கோள்; அதுவே நம் சாதனையின் சிகரம். இதுவே நமது சாதனையின் இறுதி நிலை. ஆனால், நம்முடைய உடனடியான எதிர்காலத்தில் அப்போதைக்கு அப்போது சில சமயம் ஞான ஒளிக் கீற்றுகள், ஒளிரக் காணலாம்.*

*எனினும் அந்தப் பரம்பொருளுடன் முற்றிலுமாக ஒன்ற முடிவதில்லை. எனக்கு எதிரில் வீற்றிருக்கின்ற பரமஞானி இடையறாது ஞான ஒளிக் கோளத்தில் உள்ளார் என்பதை நான் முற்றிலும் உணர்கிறேன். அந்த ஞானப் பேரொளி நாம் வழக்கமாகக் காண்கிற பௌதிக ஒளியிலிருந்து முற்றிலும் மாறுபட்டு ஒளிர்கின்ற ஒன்று. மூடப்பட்ட கண்கள்கூட இந்த ஒளியைக் காண முடிகிறது.*

*'நான்' முன்பு ஆலயத்தின் தூண் அருகே விட்ட 'அது' கண்களை மூடி இருந்தது. அந்த 'நானின்' கண்கள் மூடப்பட்டு எதையும் காண முடியாமல் இருந்தது. அது ஒரு உயிரற்ற ஜடம்போல் ஒலியற்ற ஒன்றாய் இருந்தது.*

*ஆனால் இப்பொழுதோ என்னுள் பெரும் மகிழ்ச்சி ததும்புகிறது. 'நான் மீண்டும் உயிர்த்தெழுவேன்' என்னும் நம்பிக்கை எழுகிறது.*

*வெகு தூரத்தில் ஆச்ரமத்தின் மணி ஒலிப்பதை என் காதுகள் செவிமடுக்கின்றன.*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# என்.ஆர்.கே.2

## வி.நிரஞ்சன்

அவருடைய நண்பர்கள் இருவரும் இந்த மாற்றத்தைக் குறிப்பால் அறிந்தனர். சற்றே வந்து போகும் பரவசநிலை என்று கருதினர். புற உணர்வு திரும்பியும் கூட என்.ஆர்.கே. முற்றிலும் தன் இயல்பு நிலையை அடையவில்லை. அவரது நண்பர்கள் அவரோடு சேர்ந்து கொள்ள, மூவரும் என்.ஆர். கே. வசித்து வரும் ஆதிமூலம் பிள்ளை அக்கிரகாரத்திற்கு, தெற்கு மதுரையிலிருந்து நடந்து வரலாயினர். மீனாக்ஷி கோயிலின் தென்புறத்தில் சொக்கப்ப நயக்கன் தெருவின் வழியாக வருகின்றனர். இந்தத் தெருவின் ஒரு வீட்டின் மாடி அறையில்தான் பகவானது ஞானானுபவம் முதன் முதலில் நிகழ்கின்றது. என்.ஆர்.கே. வானத்தில் மீனாக்ஷி அன்னையை திவ்ய உருவத்தில் காண்கின்றார். பொன்னொளிர் வதனம். வட்டமான கன்னங்கள். மரகதப் பச்சையின் குளிர்மைகூடிய முகத் தோற்றம். அரசமா தேவியின் மேன்மை. பொன் எனப் பளபளக்கும் புடவை. ஆபரணங்கள். அவரை மேலும் மேலும் பரவசப்படுத்தும் அன்னையின் திருக்கோலம். அவரது நண்பர்கள் இது குறித்து ஒன்றும் அறிகிலர். என்.ஆர்.கே. நிற்கவும் முடியாமல், நடக்கவும் இயலாமல் திவ்வியக் காட்சியில் தன்வசம் இழந்தார். நிகழ்ந்தது இன்னது என்று தெரியாத அவரது நண்பர்கள் அவரை அவரது வீடு வரை கொண்டு போய்ச் சேர்த்தனர்.

---

ஆதாரம்: *The Power of Presence, Part One, N.R. Krishnamurti Aiyer.*

இதன் பிறகு என்.ஆர்.கே.க்கு திவ்விய தரிசனங்களும் அதீத பரவச அனுபவங்களும் நிகழ்கின்றன. அவற்றின் தாக்கத்தால் இயல்பு நிலையில் திடமாய் இருந்துவர இயலாதவரானார். வீட்டில் நிலைக்கவும் முடியவில்லை. வீட்டை விட்டுவிடவும் முடியவில்லை. பூரண சாந்தியும் கிட்டவில்லை. இவ்வாறு அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவருக்கு, பகவானே இறைவனும் குருவும் அருளும் இறுதியில் ஆன்மப் பொருளுமாய் இருந்து இரட்சித்தனர். மனோமயமாம் காட்சி ஓய்ந்து. தனைக் காணும் அவன் தான்கடவுள் கண்டானாம் என்னும் பகவானது கூற்றுக்கு இணையாய் பகவானது மோன சன்னிதியில் கொஞ்சம் கொஞ்சமாய் பரிணமித்து வந்தார் என்.அர்.கே. இல்லறத்திலேயே நிலைத்த வண்ணம் பகவானது மகாசமாதி இரவன்று அவர் முயல்வு ஏதும் இன்றி குருவில் ஒன்றானார், இரண்டற்ற ஒன்றானார். பகவானுடைய மகா நிர்வாண நிகழ்வன்று நிகழ்ந்த பல அற்புதங்களில் இதுவும் ஒன்றாயிற்று. குருவருள் யாரேனும் அறியவல்லாரோ?

இவ்வாறு ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளாக நிகழ்ந்து வந்த என்.ஆர்.கே.யின் சாதனை பகவானின் மகா நிர்வாண இரவு அன்று பகவானின் அருளால் முழுமை அடைந்தது. படிப்படியாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மேலும் காண்போம்.

1934 பகவானின் ஜயந்தி விழாவிற்கு வெங்கடரமண அய்யரும் என்.ஆர்.கே.யும் அண்ணாமலை செல்கின்றனர். ஜயந்தி நாள் அன்னையார் சமாதியில் பூஜை நடந்து கொண்டிருக்கின்றது. சமாதியின் எதிரே பந்தல் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ 500 பக்தர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் மத்தியில் பகவானும் அமைதியே உருவாய் வீற்றிருக்கின்றார். பந்தலின் உட்பகுதியில் நிறைய பலநிறப் பூக்களால் ஆன தோரணங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன.

என்,ஆர்.கே. பகவானையே நோக்கியவண்ணம் அருணாசல அக்ஷரமணமாலையை மனதிற்குள் சொல்லிவருகின்றார். அப்படி அவர் சொல்லிவருகின்ற நேரத்தில் அவரது கண்கள் பகவானையே வைத்தகண் வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தன. அப்போது பகவானது உருவம் மறைந்தது. அவ்விடத்தில் யானைத் தலை வேழமுகத்தோன் அமர்ந்திருந்தார். பின்னர் அவரும் மறைந்து வராகத்தின் தலையோடு கூடிய விஷ்ணுவின் அவதாரம் தோன்றியது. சில வினாடிகளில் அந்தத் தோற்றமும் மறைந்து பகவான் முன்புபோல் அமர்ந்திருக்கக் கண்டார்.

மாலை அளித்து அருணாசல ரமண என் மாலை அணிந்து அருள் அருணாசலா, என்று என்.ஆர்.கே. பாடலை நிறைவு செய்யும் அதே வேளையில் அன்னையாரின் சமாதியில் பூஜையும் நிறைவு பெற்று தீப ஆரத்தி வழிபாடு நிகழ்கிறது. அனைவரும் எழுந்து நின்று வழிபடுகின்றனர். என்.ஆர்.கேயும் எழுந்து வழிபடுகின்றார். ஏற்கெனவே செய்யப்பட்ட ஏற்பாட்டின் படி தோரணமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மாலைகளை பக்தர்கள் இழுக்கவே மாலைகள் பந்தலில் இருந்து நழுவி ஒவ்வொருவர் கழுத்திலும் விழுகின்றன. பகவானது கழுத்திலும் மாலை ஒன்று விழுகின்றது. என்.ஆர். கே.யும் தனது கழுத்தில் ஒரு மாலையைக் காண்கின்றார். அச்சமயம் அவர் பந்தலின் வெளிப்புறம் அருணாசலத்தை சற்றே நோக்குகின்றார். மலையின் விளிம்புகள் மட்டுமே தெரிந்தன. மலையின் உட்புறம் வெற்றுவெளியாய் இருந்தது. அவ் வெட்டவெளியில் சிவ லிங்கம் ஒன்று அடியிலிருந்து உச்சி வரை நீண்டு உயர்ந்து தோன்றியது. மேலிருந்து கீழ் வரை பலவண்ண மலர் மாலை ஒன்று லிங்கத்தை அலங்கரித்தவண்ணம் இருந்தது. தனது சொல் மாலையை அண்ணாமலையார் அணிந்துகொண்டார், தனக்கும் மாலை அணிவித்து விட்டார் என்பது போல் நிகழ்ச்சி இருந்தது.

சில நாட்கள் கழிந்து ஒரு மாலைப் பொழுதில் பகவானின் முன் அமர்ந்திருந்த என்.ஆர்.கே. அக்ஷர மணமாலையின் பாடல்களை மனதில் சொல்லிக் கொண்டே பகவானின்மீது கண்களைப் பதிய வைத்துக் கொண்டிருந்தார். திடீரென்று பகவான் உமாமகேஸ்வரனாக தோன்றினார். பகவானின் கண்கள் என்.ஆர். கே.யின் கண்களை ஊன்றி நோக்கியவாறு இருந்தன. அப்பொழுது என்.ஆர். கே.யின் உள் இருந்து அக்கினிப் பிழம்பு விருட் என்று மேல் எழும்பி சிரசை அடைந்து கபாலத்தைப் பிளந்துகொண்டு வெளி ஏறியது. அதே நேரம் பகவானின் உமாமகேஸ்வர தோற்றத்தில் உமையின் பகுதியில் இருந்து அமிர்த ஊற்று பீறிட்டு வெளிவந்து என்.ஆர்.கே.யின் சிரசின் மேல் பொழிந்தது. அதிசயம் என்ன எனில் அண்ணாமலையின் இடது பக்கத்தில் இருந்தும் ஓர் ஊற்றுப் பெருக்கு பீறிட்டுக்கொண்டு வெளிவந்து என்.ஆர்.கே.யின் சிரசின் மேல் அமிர்தமாய் குளிர்ந்து பொழியலாயிற்று. உமை அம்மை கடும் தவம் இருந்து சிவனோடு ஒன்றிய இடம் அது என்பது புராணம். மலையின் வலமும் இடமுமாக அம்மை அப்பன் சூக்குமமாய் அருணகிரியில் அருள்பாலிக்கின்றர் என்பது புராணம். மலையின் ஒரு பகுதியில் இருந்தும் பகவானின் ஒரு பகுதியில் இருந்தும் பீறிட்டு வெளிவந்த இரண்டு குளிர் அமுதப் பொழிவினால் சிரசின் சூக்குமப் பிளவு அடைபட்டது. சிரசின் உட்புறம் வெப்பம் தணிந்து உமை அம்மையிடம் இருந்து பொழிந்த இரு ஊற்றுப் பீறிட்டால் குளிர்மை அடைந்திருந்தது. உட்பிரகாசம் நீடித்தவண்ணம் இருந்தது. அத்தனையும் பகவானின் சன்னிதியில் பகவானின் கருணைத் திருக்கண்ணோக்கு சான்று என விளங்க நிகழ்கின்றன.

என்.ஆர்.கே. இரவு உணவிற்குக்கூடச் செல்லாமல் தியான கூடத்திலேயே படுத்துவிடுகின்றார். அடுத்த நாள் காலை. அன்பர் ஒருவர் பகவான் சன்னிதியில்

ரிபு கீதையிலிருந்து பாடல்களைப் பாராயணம் செய்து வருகின்றார். அகம் பிரம்மம், அகம் பிரம்மம் என்கின்ற சொற்றொடர் திரும்பத்திரும்ப வந்து ஒலித்துக் கொண்டே இருகின்றது. இந்தச் சூழ்நிலையில் திடீரென்று என்.ஆர்.கே.யின் மார்பின் வலப்புறத்தின் உள்ளே அகம் பிரம்மம் அகம் பிரம்மம், என்னும் ஓசை எதிரொலிக்கலானது. சிரசின் உட்புறம் நீடித்து இருந்த பிரகாசம் முழுதும் மார்பின் வலப் பக்கத்திற்கு ஈர்க்கப்பட்டது. அதே சமயம் ஓர் அமுத ஊற்று அம் மையத்திலிருந்து பீறிட்டுப் பெருகி உடல் எங்கும் படர்ந்து பரவி குளிர் அமுதப் பொழிவால் அவரது உடலை மயிர்க்கால் தொறும் ஊடுருவி நனைத்தது. உடல் முழுதும் ஒருவித ஆனந்த அதிர்வுகள் பரவின. என்.ஆர்.கே. உள்ளே அமர்ந்து இருக்க முடியாமல் வெளியே விரைகின்றார். கட்டுக்களை அழித்துப் பெருகிக் கொண்டிருந்தது ஆனந்த வெள்ளம். உடலில் இருந்து வெளிப்பட்டு எல்லை இல்லாத விண் வெளியில் பரவி நிறையலாயிற்று. அமுதப் பெரு மழையில் அனைத்துப் பொருட்களும் நனைந்தன. விண் வெளி என்னும் இருப்பு அறிவுப் பெருங்கடலில் அனைத்துத் தோற்றங்களும் பனிச் சிதறல்கள் போல வெறும் நிழல்களாய் விட்டிருக்கின்றன. என்.ஆர்.கே.யும் கண்களை மூடிக்கொண்டார். சச்சிதானந்த பெரு விண்வெளியாய் ஆனார். கண்களைத் திறந்து கொண்டார். சொருபத்தை இருப்புஅறிவாய் உணர்ந்தார். திருசியங்கள் அனைத்தும் சிதாகாசப் பெரு வெளியில் நிழல் உருவங்களாய் சூக்குமமான ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதாய்க் காண்கின்றார். நிழல் உருவமாய் மீண்டும் தியான கூடத்திற்கு உள்ளே நுழைகின்றார்.

‘நான் இந்தக் காட்டிற்குள் சென்று மறைந்துவிட வேண்டியது தான்’ என்று ஓர் எண்ணம் உதித்தது. அவரது மனைவி, அவர்களது மகனையும் மகளையும் வைத்துக் கொண்டு அழுகின்ற கண்களோடு நிற்பதைப்

பார்க்கின்றார். 'கிருஷ்ணமூர்த்தி உன்னுடைய மனைவி குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு மதுரைக்குச் செல். காட்டிலே துறவி ஆகி நீ அடைய வேண்டிய பந்த மோக்ஷத்தை வீட்டிலேயே உனது வேலைகளுடனேயே நீ அடைவாய். வீட்டிற்குத் திரும்பு' என்று பகவான் வலியுறுத்திச் சொன்னார்.

நிகழ்வது உண்மையா அல்லது மனோமய காட்சிகளா என்று என்.ஆர்.கே.யால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏதோ ஒருவித நிகழ்வால் அவரது மனமும் உடலும் பெருமளவு சிதறுண்டு கிடக்கின்றன என்றுதான் அருகில் இருந்தவரால் ஊகிக்க முடிந்தது. என்.ஆர்.கே.யும் தனக்கு என்ன நேருகின்றது என்று தெளிவாய் அறிய இயலாது இருந்தார். அந்தமிலாக் கண்ணாம் ரமண பகவான் ஒருவரே என்.ஆர்.கே.க்கு உள்ளும் வெளியிலும் சாட்சியாயும் சாட்சிக்கு அப்பால் பூரணப் பொருளாயும் இருந்துகொண்டு அந் நிகழ்வுகள் இன்ன என அறிவார். உள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் சக்தியின் ஆழிப்பேரலைகள் போன்ற தாக்கத்தின் வீரியத்திலிருந்து என்.ஆர்.கே.யைக் காத்து அருளியது பகவானது கருணையே என ஒருவாறு அறியலாம். யாரே அறிவர் அருணை அண்ணலின் அருள் விசித்திரத்தை!

சிறுவயதில் இருந்தே என்.ஆர்.கே.க்கு இருந்து வரும் மன உடல் உபாதிகளை இவ்வனுபவங்களோடு பின்னோக்கிப் பார்க்கின்ற பொழுது, விட்டகுறை தொட்டகுறையாக ஜீவனுக்குள் அடங்கி இருந்து கொண்டு அவனது பக்குவத்திற்கு ஏற்ப வெளிவரும் குண்டலினி சக்தி வீறிட்டுக் கொண்டு எழுந்து என்.ஆர்.கே.க்கு சில விளைவுகளை ஏற்படுத்தி அவரை நிலைகுலையச் செய்திருக்கின்றது என்று சிறுமதியால் நாம் ஊகிக்கலாம். அருணை ரமணனே உண்மை அறிவார்.

குண்டலினி சக்தி பரிபக்குவம் அடைந்திருக்கும் சாதகனுள் மூலாதாரத்திலிருந்து சிரசின் உச்சிக்கு சகஸ்ரார தளத்திற்கு எழுச்சி உற்று அடையும். பக்குவம் இல்லாதவர்களுக்கு கட்டுக்கு அடங்காத குண்டலினி பல வித எதிர்மறை விளைவுகளை உண்டாக்கும். மேலும் குண்டலினி எழுச்சி சாதனையில் முழுமை அடைந்த யோக குருவின் கண்காணிப்பில் தான் சாதிக்கவேண்டும். இல்லை எனில் சுனாமி அல்லது அளவு கடந்த மின்விசை போன்ற பேரழிவுச் சக்தியினால் தாக்குண்டதுபோல் உடலும் மனமும் சீர் குலைந்துவிடும். மனநோய், பீதிகள், பயங்கள், செயல் இழத்தல், உற்சாகம் குன்றல் முதலிய பல பக்கவிளைவுகள் ஏற்படும். குண்டலினி எழுப்பும் சாதனையில் ஈடுபடாத ஒருவருக்கும் எந்தவித முன் காரணமும் இன்றி திடீரென்று குண்டலினி எழுச்சியுற்று இம்மாதிரி பக்கவிளைவுகளை உண்டாக்கும். அதேபோல் குண்டலினி பயிற்சியில் ஈடுபடாதவருக்கு அதன் எழுச்சி பக்க விளைவுகள் இல்லாமல் சுக அனுபவத்தையும் கொடுக்கக்கூடும். லூசியா ஆஸ்போர்னுக்கு ஆயிரம் எறும்புகள் தண்டுவடத்தின் கீழிருந்து மேலாக எழுவது போன்ற உணர்வு இருந்தது.

இருப்பது ஒரே ஒரு சக்தி தான். அது ஆத்ம சக்தி தான். குண்டலினி ஆத்ம சக்தியின் வெளிப்பாடே. குண்டலினி சித்திகள் மட்டுமே தரும் அன்றி ஞானம் தராது. ஞான அடைவிற்கு சுஷும்ணையின் வழியாக சஹஸ்ராரத்திற்கு ஏறும் குண்டலினி சக்தி பர நாடியின் மூலமாக இதயத்தில் ஐக்கியப்பட வேண்டும். அந்த ஐக்கியமே சொருபஞானம். அதுவே தன்னை அழித்து எழும் தன்மய ஆனந்தம் அதுவே சித்தமாய் உள் பொருளைத் தேர்ந்திருத்தல். அதுவே ஆன்ம சித்தி. இந்த ஆன்ம சித்தியை எளிதாக நேர்முகமாக இடையூறு ஏதும் இன்றி, வன்முறை ஏதும் இன்றி சுகமாக ஆன்ம விசாரத்தாலோ ஆன்ம சமர்ப்பணத்தாலோ அடையலாம் என்பதே பகவானின் அதிஉன்னத தனித்துவம்

*வாய்ந்த உபதேசம். சித்திகள் ஞானம் தாரா; ஆனால் ஞானம் சித்திகள் தரும்; ஆனால் ஞானி சித்திகளில் மயங்கமாட்டான். சித்திகளைத் தேடி அலையும் பொய்யாம் அகந்தையே அழிந்துபட்ட பூரணத்தில் அடைவு என்பதற்கு இடம் அன்னியம் ஏது?*

*சச்சிதானந்த சொருபமானவன் அன்றோ ஞானி? இவ்விஷயங்கள் அனைத்தையும் மனதில் கொண்டு ஆழமாய்ச் சிந்தித்தால், அரிதினும் அரிது பகவான் ரமணர் என்னும் குருவின் அருளுபதேசத்தின் மேன்மை என்பது தெளிவாகும். அவரையே கதி எனக் கொண்ட ஒவ்வொருவரும் மனதில் தெளிவும் சந்தோஷமும் திடமும் கொள்ளலாம். பகவானையே கதி எனக் கொண்டு அவரைப் பல காலும் புகல் அடைந்தவர் அன்றோ என்.ஆர்.கே. யாதும் அறியாது என் மதியினை மருட்டி எவர் கொளை கொண்டது அருணாசலா என்று வியப்படையும் அளவிற்கு பகவானின் அருட் கண்ணியில் ஆரம்பத்தில் இருந்தே என்.ஆர். கே பட்டுக் கொண்டார். அவரது மீட்சி எவ்வளவு சிறப்புடைத்து என்பதை அறியலாம்.*

**ரமணோதயம்**

Voluntary Services

K. *சுரேஷ் ஜானகிராமன்* *9444127770*

*ராஜேஷ்* M.S. *9840075778*

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் – 8

## வேதம் கண்ட தத்துவ விசாரம்

டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

விசாரம் என்ற தலைப்பில் களமாடும் சிந்தனையாளர்கள், பிரஸ்தானத்ரையம் என்னும் உபநிஷதங்கள், பிரம்மசூத்திரம் மற்றும் பகவத் கீதையை அடிப்படையாக வைத்துச் செயல்படுகின்றனர். இதில் பிரம்மம் என்னும் அழியாச் சக்தி ஒருபுறமும், ஜீவன் என்னும் அழியும் மானுடம் மறுபுறமுமாக வைத்து, இவர்களுக்கு இடையே இருக்கக்கூடிய உறவைப் பற்றிய சிந்தனையே வேதாந்த விசாரமாக பார்க்கப்பட்டது. பிரம்மத்தை அடைய ஜீவன், பற்றுகளைத் துறக்க வேண்டும், சிற்றின்பத்தை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பிரதானமாக முன் வைக்கப்பட்டன.

இந்த இறைத் தேடலின் அடிப்படையில் பிற்காலத்தில் வந்த மதாசாரியர்கள், அத்வைதம், துவைதம் மற்றும் விசிஷ்டாத்வைதம் என்ற மூன்று சித்தாந்தங்களை பரப்பினார்கள். அத்வைதம், ‘இரண்டு என்பது இல்லை’ என்ற கருத்தை முன்வைக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளேயே பரம்பொருளைக் காண முடியும் என்பது இந்த தத்துவத்தின் மிகவும் மேம்பட்ட ஒரு வெளிப்பாடு. இதன் மறு எல்லையில் இருப்பது துவைதம். இதில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இருவேறு துருவங்கள். அந்த உறவு, ஆண்டான்

அடிமை என்ற முறையில் அமைகிறது. ஜீவாத்மா பரமனை வணங்கி, இறுதியில் முக்தி அடைகிறது. இது பின்னால் வந்த பெரும்பாலான பக்தி மார்க்கங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. விசிஷ்டாத்வைத மார்க்கம் இந்த இரண்டு சித்தாந்தங்களில் இருந்தும் கருத்துக்களை எடுத்துக் கொண்டு ஆனால் அவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு மார்க்கத்தை நிலை நாட்டுகிறது. இந்த மூன்றிலும் ஜீவாத்ம, பரமாத்ம உறவு முன்னிலைப் படுத்தப்படுகிறது

இவை இறையியல் (Theology) மற்றும் தத்துவம் (Philosophy) என்னும் கோட்பாடுகளை உள்ளடக்கியவை. கடவுள் தொடர்பான கருத்துகளைச் சொல்வது இறையியல். இதை பக்தி என்னும் கூற்றில் அடக்கலாம்; இது சமயம் சார்ந்தது. தத்துவம் என்பது உண்மை அல்லது சத்தியத்தின் தேடல். இதை மெய்யியல் என்று அழைப்பார்கள். பல சித்தாந்தங்களில் இறையியலும் மெய்யியலும் பிணைந்து போவதைப் பார்க்கலாம்.

இதற்கு எதிர்வினையாக சார்வாக தத்துவங்கள் ஆங்காங்கே தோன்றின. இவை வாழ்க்கையில் இன்பம் துய்த்தலையே பிரதான நோக்கமாகக் கொண்டவை. அதனால் வைதீக மதம் அறிவுறுத்திய ஞானபக்தி மார்க்கங்களை சார்வாக மதத்தினர் புறந்தள்ளினர். பிரத்தியக்ஷமாகக் கண்ணெதிரே தோன்றும் வாழ்க்கையே பிரமாணமானது. அதைத் தவிர்த்து ‘கற்பனையாக’ உருவாக்கப்பட்ட பிரம்மம் என்னும் பிம்பத்தை அவர்கள் ஏற்கவில்லை.

இந்த வேறுபட்ட ஞானச் சுவடுகளின் பின்னர் வந்த பௌத்த, ஜைன மதங்கள், வைதிக மதத்தின் சில கோட்பாடுகளை ஏற்று, பிறவற்றைக் கண்டனம் செய்தன. இந்த மதங்களிலும் காலப்போக்கில் பல மாற்றுக் கருத்துகள் வந்தன. நாகார்ஜுனர் போன்ற பௌத்த ஞானிகள், ஒரு நடுவழிப் பாதையை

*ஸ்தாபனம் செய்தனர். முழுமையான துறவும், அதன் மறு புறமான முழுமையான இன்ப நுகர்வும் வாழ்வின் இரு எல்லைகள். இவை இரண்டிற்கும் நடுவான 'மாத்யமிக' பாதையை அவர்கள் வற்புறுத்தினர். இதை அடைய எட்டுவித நன்னெறிகள் கொண்ட வாழ்க்கையை அவர்கள் அறிவுறுத்தினார்கள்.*

*இதற்குப் பல்லாண்டுகளிக்குப் பின்...*

*இந்தியாவிற்கு வெளியே பாரசீகத்தில் ஜெலாலுத்தின் ரூமி போன்ற அறிஞர்கள் சில புரட்சிகரமான கருத்துக்களைப் பற்றிப் பேசினார்கள். 'இறகுகளுடன் பிறந்திருக்கும் நீ. ஏன் வாழ்க்கையில் ஊர்ந்து செல்ல விரும்புகிறாய்? நீயே இந்த உலகத்தில் சஞ்சரிக்கும் ஆனந்தப் பிரவாகம். உன்னுடைய உண்மையான நிலையை அறிந்து கொள். வெறும் நூல்களையும் அறிவுரைகளையும் கற்றறிந்த ஏட்டுச் சுரைக்காயாக ஆகி விடாதே. இந்த உலகமே ஒரு மாபெரும் வாசகசாலை என்பதை உணர்ந்து கொள்.' என்றார் ரூமி*

*இத்தகைய கருத்துக்கள் பாரதியின் பாடல்களிலும் எதிரொலிக்கின்றன. 'நான்' என்னும் தலைப்பில் வரும் பாடலில்,*

*'வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்;*
*மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;*
*கானிழல் வளரும் மரமெலாம் நான்,*
*காற்றும் புனலும் கடலுமே நான்.' (1)*

*என்றெல்லாம் முழங்குகிறார் பாரதியார்.*

*இறுதியில் மிகப் பெரிய வேதாந்தக் கருத்தையும் வைக்கிறார்*

*'நானெனும் பொய்யை நடத்துவோன் நான்;*
*ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்*
*ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்*
*அறிவாய் விளங்குமுதற சோதிநான்!' (7)*

'நானெனும் பொய்யை நடத்துவோன் நான்' என்னும் வரிகளில் அத்வைதத்தின் அத்தனை சாரமும் வருகிறது. சங்கரர் கண்ட மாயா வாதமும் பௌத்தத்தின் சூன்ய வாதமும் பிணைந்து சூஃபிக்கள் கண்ட அக ஆராய்ச்சியையும் பார்க்கிறோம்.

இந்த அனைத்துக் கருத்துகளின் சங்கமமாக வேதங்களை நாம் பார்க்கலாம். வேதங்கள் இந்த எல்லா நிலைகளிலிருந்தும் இயங்கி, அதே சமயம், தனிப்பட்ட ஒரு ஆன்மிக விளக்கமாகவும் உள்ளது. இதில் பக்தியின் விளிம்புகளைப் பார்க்கிறோம். அதே சமயம் அந்த உறவு, அன்பும் உரிமையும் கொண்ட ஒரு பாசப் பிணைப்பாக அமைந்திருக்கிறது இறைவனைத் தந்தையாக, தோழனாக, ஏன் ரதமாகக் கூட வேத புருஷன் பார்க்கிறான். அவர்கள் வேள்விகளை விரிவாகச் செய்தார்கள். அதற்கான விளக்கங்கள், நியமங்களை எல்லாம் ஏற்படுத்திக் கொண்டார்கள். சோம யாகம், அஸ்வமேதம், ராஜசூயம், வாஜபேயம், விஸ்வஜித் போன்ற பலவித யாகங்கள் செய்யப் பட்டன.

அது ஒருபுறம்.

மறுபக்கத்தில் அவர்கள் இயற்கையைப் பெரிதும் நேசித்தார்கள். அதன் ஊடே பரம்பொருளின் இருத்தலை ஊகித்து உணந்தார்கள். பல வேத மந்திரங்கள் இயற்கை சக்திகளான இந்திரன், அக்னி, வருணன் போன்றவற்றைக் குறிக்கும். ஆனால் சில, எல்லா தெய்வங்களையும் (விஸ்வே தேவர்கள்) நோக்கிப் பாடப்பட்டவை. இரட்டையர்களான மைத்ரா வருணன், த்யாவாப்ருத்வி போன்றவர்களையும், தெய்வங்களின் தாய் வடிவில் அதிதியையும், பொருட்களை உற்பத்தி செய்யும் விஸ்வகர்மா வடிவிலும் அந்தப் பரம்பொருள் பேசப்படுகிறது. சத்யம் (உண்மை வடிவம்) மற்றும் ருதம் (இயற்கை நெறி, பிரபஞ்ச ஒழுங்கு முறை) இவை இரண்டும் அதன்

*வெளிப்பாடாகும். இது நடைமுறை வாழ்வின் உயர் மனோபாவத்தை வெளிப்படுத்தும். இதனால் 'ருதம் வதிஷ்யாமி சத்யம் வதிஷ்யாமி, தன் மாமவது' என்பது தினசரி பிரார்த்தனையில் சொல்லப்படும் மந்திரம். பல தெய்வங்கள் பேசப்பட்டாலும், இவற்றின் அடிநாதமாக 'ஒன்றே தெய்வம்' என்னும் கோட்பாடும் விரவிக் காணப் படுகிறது. (ஏகம் சத், விப்ரா: பஹுதா வதந்தி. ரிக் 1.164.45)*

*ஹிரண்யகர்பன் என்பது வேதங்களில் அதிகம் பேசப்பட்ட விஷயம். இது படைப்பிற்கு முற்பட்டது. ஸ்தூலமாக உணரப்படாத சூக்ஷ்ம வடிவம். இதைப் பற்றி ருக் வேதம் 10 ஆவது மண்டலம் 121சூக்தத்திலும் யஜுர் வேதத்தின் 8 ஆம் அத்தியாயத்திலும் பார்க்க முடியும். இது பிரம்மனின் படைப்பான தங்க மய பேரண்டத்தின் கருவாகப் பார்க்கப் படுகிறது. அதனால் அஃறிணையாகப் பேசப்படாமல் இது பேரண்ட புருஷன் என்றும் கூறப்படும். இதன் ருக் வேத விளக்கம் சுவையானது. பத்து ருக்குகளில் இது வருணிக்கப் படுகிறது. இவற்றுள் ஒன்பதில் 'ஹவிஸை எந்த தெய்வத்திற்கு அளிப்போம்' என்னும் உவகை கலந்த வியப்பு காணப்படுகிறது. 'கஸ்மை தேவாய ஹவிஷா விதேமா' என்னும் வரிகள் பிரசித்தம். இந்த 'கஸ்மை' என்ற சொல்லுக்கு உரையாசிரியர்கள் பலவித விளக்கங்களை அளிக்கின்றனர். புகழ் பெற்ற சாயண பாஷ்யத்தில் க என்பதையே பிரஜாபதியைக் குறிக்கும் வார்த்தையாப் பார்க்கலாம். பல ஒப்பற்ற உயர் குணங்களைக் கொண்ட அந்தப் பரம் பொருளையே 'யார்' என்ற சொல்லால் அழைப்பதும் பொருத்தமானதுதான். அந்த குணங்களை சற்று அலசுவோம்.*

य आ॑त्म॒दा ब॑ल॒दा यस्य॒ विश्व॑ उ॒पास॑ते प्र॒शिषं॒ यस्य॑ दे॒वाः ।

यस्य॑ छा॒यामृतं॒ यस्य॑ मृ॒त्युः कस्मै॑ दे॒वाय॑ ह॒विषा॑ विधेम ॥

*- (ருக். 10.121.02)*

*அவன் நம் ஆன்மாவுக்குச் சக்தி அளிப்பவன்; தேவர்களும் மனிதர்களும் அவனுடைய வழிகாட்டுதலை வேண்டுகின்றனர். அவன் நிழலே அழிவற்ற ஆனந்த மயமான நிலை; அதுவே மரணமும்கூட! 'ஹவிஸை எந்த தெய்வத்திற்கு அளிப்போம்?'*

यः प्रा॑ण॒तो नि॑मिष॒तो म॑हि॒त्वैक॒ इद्राजा॒ जग॑तो ब॒भूव॑ ।

य ईशे॑ अ॒स्य द्वि॒पद॒श्चतु॑ष्पद॒ः कस्मै॑ दे॒वाय॑ ह॒विषा॑ विधेम ॥

*- (ருக். 10.121.03)*

*தன் உயர்வினால் அவன் பிராணனாக, பார்க்கும் தன்மையாக ஒளிர்கிறான். இரண்டு, மற்றும் நான்கு கால் பிராணிகளின் தலைவன் அவன்.*

*மேலும் அவனைப் பற்றி உற்சாகமாக வருணிக்கிறது இந்த ருக்வேத சூக்தம். அவன் உலகைப் படைப்பவன்; ப்ராஜபதியான பிரமனும் இவனே; அவன் படைக்கும்போது கிரியாசக்தியாகவும், படைக்கப்பட்டவைகளில் ஆசை அல்லது காமமாகிய இச்சா சக்தியாகவும், பிராண சக்தியாகவும் மற்றும் உயர் நிலையாகிய ஞான சக்தியாகவும் அவன் விளங்குகிறான். (லலிதா சஹஸ்ர நாமத்தில் அம்பாளுடைய நாமங்களில் ஒன்று 'இச்சா சக்தி ஞான சக்தி கிரியாசக்தி ஸ்வரூபிணீ' என்று வருகிறது).*

*இந்த முடிவற்ற அகவியப்பே வேத மனிதனின் ஆன்மிக விஸ்வரூபம். ஹிரண்யகர்பன் என்பதைத் தனி அம்சமாகப் பிரிக்காமல், பிரம்மனே இந்த வடிவாக வந்ததாகவும் உணரப்படும். இதன் விளக்கத்தை நிருக்தத்திலும் காணலாம் (10.23). சூர்ய பகவானை 'ஆதித்ய ஹ்ருதயம்' என்னும் ஸ்தோத்திரம் ஹிரண்ய கர்ப்பனாகவும் அக்னிகர்ப்பனாகவும் பார்க்கிறது. இது வால்மிகி ராமாயணம் யுத்த காண்டம் 107வது சர்கமாக சில பிரதிகளில் வருகிறது.*

போற்றத்தக்க அகத்தேடல். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இது எப்படி சாத்தியமாயிற்று?

வேத காலத்தில் நல்ல மனமும் நல்ல அறிவும் இரண்டு முக்கியமான வரங்களாகப் பார்க்கப்பட்டன. இரண்டும் ஒன்றுதானே என்று தோன்றும். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

நல்ல மனம் படைத்தவனுக்கு திறமையும் அறிவும் இல்லாவிடில், அவனுடைய நல்ல பண்புகளால் உலகத்திற்கு பயனில்லை. அதேபோல திறமை படைத்தவன் நல்ல எண்ணங்களை உடையவனாக இல்லாவிட்டால் அவன் உலகத்திற்கு தன் திறமையை வைத்து தீமையையே செய்வான். அதனால் அவன் தனிப்பட்ட முறையில் ஆதாயம் பெறுவான்; ஆனால் அவனை சுற்றி உள்ளவர்கள் பயன்பெற மாட்டார்கள்.

இவற்றுடன் கூட ஒரு மூன்றாவது குணம் ஞானம். இந்த மெய்ஞானம் அவனை உயர்ந்த ஆன்மிக உலகத்திற்கு அழைத்துச் செல்லக்கூடும்.

இம்மூன்று குணங்களும் அன்றாட வாழ்வின் மரபுகளாயின. புறவாழ்வின் பொய்மைகளை வடிகட்ட அவை பேருதவி புரிந்தன. இதையே 'மேதா' என்று வேதங்கள் வருணிக்கின்றன. 'மேதா சூக்தம்' என்று இதற்காகவே ஒரு தனியான வேத மந்திரமும் ஏற்பட்டது.

இப்பொழுது இந்த மூன்று குணங்களைக் கூறும் மந்திரத்தை கவனிப்போம்

'எங்களுக்கு, அனைவருக்கும் நன்மை பயக்கும் மகிழ்ச்சியான மனத்தையும், திறமையையும், ஞானத்தையும் கொடுங்கள். உம்முடைய நட்புடன் உம் மகிழ்ச்சியில் பங்கு பெறுவோமாக. கால்நடைகள் பசும்புல்லில் மகிழ்ச்சி பெற்றிருப்பது போல, நாங்கள் உங்களுடன் இருப்போம். நீவிர் மிகவும் உயர்ந்தவர் அல்லவா.' - (ருக் 10. 251)

भद्रं नो अपिं वातय मनो दक्षंमुत क्रतुंम् ।
अधां ते सख्ये अन्धंसो वि वो मदे रणन्गावो न यवंसे विवंक्षसे ॥

இங்கு மூன்று குணங்கள் பேசப்படுகின்றன. அவற்றை சொல்வதற்கு முன்னால் ஆரம்பத்தில் ஒரு அழகிய சொலவடை பயன்படுத்தப்படுகிறது. சமஸ்கிருத மொழியில் 'பத்ரம்' என்னும் சொல் மகிழ்ச்சியையும் மங்கலத்தையும் குறிக்கும். அத்துடன் தொடர்புடைய மூன்று குணங்களை இவர்கள் ஆண்டவனிடம் கேட்கிறார்கள். அவை மேல் சுலோகத்தில் அடிக்கோடிடப்பட்டுள்ளன.

1. உயர்ந்த மனப்பான்மை 'மன:'
2. அத்தகைய மனதுடன் கூடிய திறமை 'தக்ஷ'
3. மேலான அறிவு 'க்ரது'

இவை மூன்றும் ஒருங்கே சங்கமிக்கும் இடத்தில் உயர்ந்த தத்துவ விசாரம் எழுகிறது அந்த விசாரத்தின் மூலமாகக் கீழ்மையான குணங்கள் விலக்கப்பட்டு தீய சக்திகள் அறவே ஒழிக்கப்படுகின்றன. மனித சமுதாயம் உயர்ந்த எண்ணங்களோடு கூடி ஒரு தெய்வீக நிலையில் சஞ்சரிக்கத் தொடங்குகிறது.

அந்த நிலையில் அவை இறைவனுடைன் இன்பமயமான ஒரு உலகிலே, நட்போடு பழகுகின்றன. இந்த நிலையில் இறைவனுடைய அருகிலே இருக்கக்கூடிய சாமீப்யம், சாலோக்கியம் போன்ற நெருக்கம் சாத்தியமாகிறது. இதற்கு ஒரு அழகிய உதாரணத்தையும் வேதரிஷி காட்டுகிறார்.

பசுக்கள் ஒரு பெரிய புல்வெளியிலே எந்தவித பயமும் இல்லாமல் மேய்கின்றன. அவைகளுடைய உள்ளத்திலே அந்த பசும்புல், இனிய காற்று இவை இரண்டும் மேலான மகிழ்ச்சியை அளிக்கின்றன. கவலைகள் அற்றுப் போகின்றன. மேய்ப்பான் நம்மைக்

காப்பான் என்னும் தைரியம் உள்ளத்தில் அமைதிதர, அந்தச் சூழலே தெய்வீகமாக ஆகிறது.

ஆண்டாள் சொன்ன முறையிலேயே, ‘கற்றுக் கறவை கணங்கள்’ என்ற விதத்திலே நாம் மேலான ஒரு அமைதியை நாடி அதை அடைகிறோம். அதில் இறைத் தன்மையை காண்கிறோம். இதைவிட மேலான ஒரு சொர்க்கமோ மோக்ஷமோ நமக்குத் தேவையில்லை என்று எண்ணம் மேலோங்குகிறது.

ருக் வேதம் (10.90), ‘அமிர்த இக பவதி’ என்னும் உயர் நிலை பற்றிச் சொல்லும். அதன் பொருள், ‘இந்த உலகத்திலேயே நாம் அழிவில்லாத தெய்வீக வாழ்க்கையை அனுபவிக்கலாம்’ என்பது. இதுவே சான்றோர் கண்ட உயர்நிலை. அறிவும் திறமையும் நற்பண்போடு சேரும் போது அது உலகம் முழுவதற்கும் நன்மை பயக்கிறது.

இந்த உயர்ந்த அறிவை வேதங்களில் பல இடங்களில் பார்க்க முடிகிறது ஒரு வரி ‘எந்த மேதையை தேவர்களும் பித்ருக்களும் விரும்பி அடைகிறார்களோ அந்த மேதாவிலாசத்தால் எனக்குப் பேரின்பமளிக்கும் சிறந்த அறிவைக் கொடு.’ - யஜுர் 22.14

மகிழ்ச்சியும், சமநோக்கும், உறவுகளும் நிரம்பிய வேத புருஷன், வேள்விகளால் இயற்கைக் கடவுள்களைத் திருப்தி செய்தான். அவர்களிடம் இக வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் வரம் பல கேட்டுப் பெற்றான். ஆனால், இந்த லௌகிக வாழ்வின் ஊடே பரம் பொருளையும் கண்டான். பற்றுகளை விலக்காமல், அதே சமயம் புறத்தோற்றங்களுக்குப் பூட்டுப் போட்டு, அகத் தேடலில் ஈடுபடுவது அந்த உயர்புருஷனுக்குச் சாத்தியமாயிற்று

பின்னர் வந்த சித்தாந்தங்களில் இன்பம் துய்த்தல் என்பது புறம் தள்ளப்பட்டது. காயக் க்லேசம்

(உடலை வருத்துதல்), பற்றைத் துறத்தல், என்பவை முன் நிறுத்தப்பட்டன. சன்யாசம் என்பது ஆன்மிக, தத்துவ உலகில் அதிகம் பேசப்பட்டது. தத்துவ உலகம் சமயத்துடன் இணைந்தது. இறைவனை இன்ப வடிவமாகப் பார்க்கும் உள்விசாரம் பெருமளவுக்கு மறைந்தது.

வேதம் கண்ட இறைவிசாரத்தை ஆராயும் பொழுது ரமண பகவானின் ஒரு பாடலை ஆதாரமாகக் கொள்ளலாம்.

*அனியபாவத்தின் அவன் அகம் ஆகும்*
*அனனிய பாவமே யுந்தீபற*
*அனைத்தினும் உத்தமம் உந்தீபற - (உந்தியார் 8)*

ஒரு பரம்பொருளை உருவமாகவோ அருவமாகவோ நாம் பார்க்க விழைகிறோம். அவனை நமக்கு வெளிப் பட்டவனாகப் பார்ப்பது 'அன்னிய' பாவம். அவனைத் தனக்குள்ளே இருப்பவனாகப் பார்ப்பது 'அனன்னிய' பாவம்.

பகவான் இந்த 'அனன்னிய' பாவத்தையே உத்தமம் என்று சொல்வார். இது அவ்வளவு எளிதல்ல. ஆனால் இந்த நிலையை அடையப் பெற்றவன் மிகப் பெரிய புண்ணியவான். அவன் பரிபூரண நிம்மதியை அடைகிறான். அதிலிருந்து அவன் என்றும் விழுவதில்லை.

பற்றுவிலக்காத வேத விசாரம் ஒருபுறம். பற்று விலகிய வேதாந்த விசாரம் மறுபுறம். ரமணரின் இந்த அஸ்திவாரத்தில் பயணிக்கும் போது 'அனன்னிய' பாவம் எந்த முறையிலும் கிடைக்கும் என்னும் தெளிவு கிட்டும்.

வேத விசாரம் மற்றும் வேதாந்த விசாரம் என்னும் இரண்டுமே ஒப்பற்ற மெய்ப்பொருளை அடைய உதவும் இருபாதைகள். இவற்றுள் வேதாந்த விசாரம் அதிக



அளவில் பேசப்படுகிறது. அது பற்றிப் பல நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் வேத விசாரம் அந்த அளவுக்கு மக்களைச் சென்று அடையவில்லை. அதற்கு ஒரு காரணம், இக்கருத்துகள் ஒரு சீரான படுகையில் பாயும் தெள்ளிய நீரோட்டமாக அமையாமல், வேதங்கள் என்னும் சமுத்திரத்தில் விரவிக் காணப்படுகின்றன. அதில் முத்தெடுக்கும் பணிதான் வேத விசாரம்; சற்று கடினமான தேடல். ஆனால் இதில் காணும் அடிப்படை மானுட இயற்கையியலும் மற்றும் கவித்துவமும் இத்தேடலை விகசிக்கச் செய்கின்றன. வாழ்வியல் கடமைகளைப் புறந்தள்ளாமல், இறைத்தேடல் சாத்தியம் என்பது இன்றைய நூற்றாண்டு மாந்தர்க்கு ஒரு புதிய தத்துவ பொக்கிஷமாகும்.



# ரமண புராணம்

## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (9 – 20)

"விண்ணாடரும் சுவைக்க வேண் அவா கொண்டு
விழை. ..09
கண்ணார் அமுதக் கடவுள் உமையோடு
திருக் கயிலாயத்தில் சிறக்கக் கொலு வீற்று
இருக்கையிலே ஏய்ந்த பதினெண்கணமும் கண்களிக்க
ஓங்குபரப்பத்தி உருத்தெரியப் பக்குவர்க்குப்
பாங்கு பெற நீ போய்ப் பயின்று ஒழுகிக் காட்டுக என
ஆருயிர் மாட்டு இன்ப அருள் ஆற்றல் ஒன்றே தன
காரியமாக் கொண்ட அக்கண்ணுதலோன் கூற
அவன் சந்நிதியை விட்டுத் தணவாது தற்பரமாம்
தன்னது உயிர்த் தத்துவத்தைத் தான் அறிந்து பேதமறு
நேசம் பயில் சகஜ நிஷ்டன் குடமுழ நந்தீசனே
வாசகனாய் ஏய்ந்தது கொண்டு அவ்வுழுவல் "…….20

பதவுரை:

விண்ணாடர் - தேவர்கள்,

வேண் அவா - மிகுந்த ஆவல்; விழை விரும்புதல்.

கண்ணார் அமுதக் கடவுள் - கருணை அமுத ஒளி பொழியும் கண்கள் கொண்ட சிவபெருமான் (எல்லை அற்ற அந்தம் இல்லா கண் ஆன்மா).

உமை - பார்வதி;

பதினெண் கணங்கள் - 18 கணங்கள் என்போர் பதினெட்டு இனக்குழுக்கள் ஆவர்.

இவர்களை பதினெண் கணங்கள் என்பர். இவர்களுக்கு அதிபதியான காரணத்தினால் சிவமைந்தன் விநாயகர் கணபதி என்று அழைக்கப்பெறுகிறார். பதினெண்கணங்கள் சிவலோகத்தில் சிவன் வீற்று இருக்கும் சபையில் அவர்களுக்கான இடத்தில் பொருந்தி அமர்ந்திருப்பர்.

பரபக்தி - மேலான தெய்வ பக்தி; எந்த எதிர்பார்ப்பும் இல்லாத தூய பக்தி.

பயின்று ஒழுகிக் காட்டுதல் - கற்றல், பயிற்சி செய்து, காட்டுதல்.

கண்ணுதலோன் - நெற்றிக் கண் கொண்ட சிவன்.

தணவாது - இணை பிரியாது.

தற்பரம் - தானே தான் என்று உணரும் இறை மாண்பு.

பேதமறு நேசம் - ஆன்ம நிலை; இரண்டற்ற அன்பு; அன்பு செலுத்த வேறு ஒருவர் இல்லாத அன்பு மயம்.

சகஜ நிஷ்டன் - தன்னில் நிலைத்து நிற்பவன்; ஆன்ம நிலை நிற்பவர்.

குடமுழ நந்தீசன் - குடம் முழவு, மத்தளம் வாசிக்கும் நந்தி தேவன்; சிவலோகத்தில் நந்தீஸ்வரர் மத்தளம் வாசிக்க சிவன் தாண்டவம் ஆடுவார்.

வாசகன் - மாணிக்கவாசகர்.

சிவலோக காட்சி:

இந்த வரிகளில் சிவலோக காட்சி வர்ணிக்கப் படுகிறது. சிவன் ஏகன். அவனே அனேகன். ஏகன் அனேகனாக காட்சி அளிக்கிறான்.

தேவர்கள் உண்ணும் அமுது, வாயால் உண்ணப்படுவது. அது உடல் நலம் தரும். கண்ணார் அமுதம் கண்ணால் பருகப்படுவது. அது உயிர் நலத்தைத் தரும். உயிரை ஆன்மாவில் ஒடுக்கும்.

*ஆயுள் நீட்டிக்க அமுதை உண்ணும் தேவர்களும் மிகுந்த ஆவல் கொண்டு சுவைக்க விரும்பக்கூடிய அமிர்தம் ஒன்று உண்டு. அது சிவபெருமானின் கருணை ஒளிக்கூட்டும் கண்களினின்று பொழியும் அமுதம்.*

*தேவர் யாவரும் வந்து நின்று தொழ கண்ணார் அமுத கடவுள் உமாதேவியுடன் சிவலோகத்தில் கொலுவீற்று இருக்கிறார். அச்சபையில் பொருந்தி அமைந்தவர்களான 18 கணங்களும் இந்த கண்கொள்ளாக் காட்சியினை கண்டு களிக்கின்றனர்.*

**குன்றாத ஞானக் கொடைக்குணம் வுழுவல் அன்புத் தோற்றங்கள்:**

*இத்தகைய சூழலில், உயிர்களிடத்தில் அருள் ஆற்றல், அருள் பாலித்தல் ஒன்றையே தன் காரியமாகக் கொண்ட நெற்றிக்கண் கொண்ட ஈசன், "பக்குவம் அடைந்த ஆன்ம நாட்டம் கொண்டவர்க்கு, தழைத்து ஓங்கும் பரபக்தி என்ன என்று அதன் தன்மை வெளிப்பட பக்குவமாக நீ போய் பயின்று (கற்று), ஒழுகி (பயிற்சி செய்து), காட்டு (காண்பிப்பாய்)", என்று நந்தி தேவரிடம் கூறினார். நந்தீசர் சிவன் சன்னதியை பிரியாதவர். அதாவது சிவனும் அவரும் ஒன்று என்பதாக ஆன்ம நிலையில் நிற்பவர். தனது உயிர் தத்துவத்தை, தான் ஆன்மா என்பதை உணர்ந்தவர். அவர் பேதங்கள் அற்ற அன்பாய் நிற்பதால் சகஜ நிஷ்டர். அவர் ஈசனின் முன்பு குட முழவு, மத்தளம் வாசிப்பவர். எனவே அவர் குடமுழ நந்தீசன் என்று வர்ணிக்கப்படுகிறார். ஈசனின் ஆணையினால் ஆன்மாவில் ஒன்றியவரான நந்தீசர் இரண்டாகப் பிரிந்து மாணிக்கவாசகராய் உடல் உயிர் பெற்றார்.*

*இத்தகைய ஆன்மப் பிரிதல் நிகழ்வுகள் உயிர்கள் உய்ய இறைவன் காட்டும் கருணை மழை ஆகும். மீண்டும் மீண்டும் இத்தகைய ஞானப் பிறவிகளைத் தொடர்ச்சியாக அனுப்பி வைத்தல் பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் செயலாகும்.*

**ஆன்மா:**

அனைவருக்கும் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு உள்ளது மறுக்க முடியாதது. நமக்கு உள்ளே ஒரு சத்தியப் பொருள் ஒன்று இல்லை என்றால் அந்த 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு தோன்றாது. அந்த சத்தியப் பொருள் இரண்டற்று, எண்ணங்கள் அற்ற உள்ளம் என்ற இதயமாக உள்ளது. எண்ணங்கள் அற்ற இடத்தில் உள்ளதால் எண்ணங்களைக் கொண்டு அதை அறிய முடியாது. அதை அப்படியே உணர்தல் தான் அதனை அறிதல். இவ்வாறு பொருள்படும் படியாகவே 'உள்ளது நாற்பது' என்னும் உபதேச நூலில் பகவான் கூறியுள்ளார்.

ஆன்மா எண்ணங்கள் அற்ற நிலை. அதாவது எண்ணங்கள் என்பது மனம். மனம் என்பது அகந்தை. அகந்தை என்று ஒன்றும் இல்லை. அது ஒரு பொய்யான உணர்வு. கயிறு பாம்பு போல் மாயத் தோற்றம் அளிக்கிறது. பாம்புத் தோற்றம் கயிறு இல்லையேல் தோன்றாது. பொய்த்தோற்றம் ஆகிய பாம்பு கயிற்றினின்றே தோன்றுகிறது. அதுபோல் அகந்தை எனும் பொய்த்தோற்றம் ஆன்மாவில் இருந்தே தோன்றுகிறது. அதாவது அகந்தை தானாகத் தோன்றாது. ஆன்மாவினால் தோற்றுவிக்கப்படுகிறது. ஆன்மாவால் ஒளிர்விக்கப் படுகிறது.

கயிறும் பாம்பும் ஒருசேர தோன்றாது. அகந்தை வயப்படும் போது ஆன்மா விளங்காது. அகந்தை அழிந்தால் ஆன்மா அக்கணமே தோன்றும்.

அகந்தையே ஆன்மாவை உணர முடியாது திரையாக மறைக்கின்றது. அகந்தை தோன்றிய இடத்தில் ஒடுங்கினால் ஆன்மா விளங்கும்.

ஆன்மாவில் இருந்து பிரியும் அகந்தை ஒன்று பலவாக விகாரப்பட்டு பரிணமிக்கிறது. ஏகன் அனேகன் ஆவது. மீண்டும் அனேகன் ஏகன் ஆவதுதான் உயிர்



தத்துவம். அகந்தை உடல் இன்றி இருக்காது. அதுவே உயிர் அகந்தை. அகந்தையே ஆன்மாவிலிருந்து உடல் எடுத்து பிறக்கும் உயிர்கள் ஆகும்.

உடலுடன் கூடியே அகந்தை ஒடுக்கப்பட முடியும். அகந்தை அழியாது உடல் அழியுமாயின் மீண்டும் அகந்தை வேறு உடல் எடுக்கும், பல்விருகமாகி பறவையாய்.... பல்கால் மாறி ஓடி அலை சேர்ந்து உழலும் பிறவிகள்.

அகந்தை என்றால் என்ன?:

ஏகன் ஆகிய ஆன்மாவில் இருந்து இரண்டாக பின்னர் அநேகங்களாக பிரிவது அகந்தை. *(From non dualism to dualism)*. 'நான்', 'எனது', 'நான் செய்கிறேன்' என்பதாவது அகந்தை. இந்த 'நான்' என்பது ஒருவரின் உண்மையான இருப்பு உணர்வு இல்லை.

இந்த நான் தன்னை தன் ‘உடலே நான்’ என்று எழும் பொய் உணர்வு. ஒருவர் தன் உடலை அபிமானித்தே ‘நான்’ என்று கூறிக்கொள்கிறார். மற்ற ஒருவரின் உடலைப் பார்த்து ‘நான்’ என்று கூறுவது இல்லை. உடலை அபிமானித்து எழும் நான் என்ற பொய் உணர்வு ‘எனது’ என்னும் பொய் உணர்வுக்கு வித்தாகிறது.

பின்னர் ‘நான் செய்கிறேன்’ என்ற அகங்காரத்திற்கு இடம் கொடுக்கிறது. அகந்தையே மனம். மனமே எண்ணங்கள்.

எங்கெல்லாம் எண்ணங்கள் உண்டோ அங்கு அகந்தை உண்டு. எண்ணங்கள் இல்லையேல் அதாவது அகந்தை இல்லையேல் ஆன்மா உணரப்படும். ‘அகங்கார ஓசை அடங்குமிடத்தே, தன் முகம் காணத் தோற்றும் அதி மோகன மெய்யோன்’.

பாம்பு பொய்த்தோற்றம் என்று அறிந்த பின்னரே உண்மையான கயிறு தோன்றும்.

ஆன்மா இரண்டற்றது, இருவேறு அற்றது, வேறுபடாதது. பேதம் அற்றது. இரண்டற்ற ஆன்மாவில் இருந்து இரண்டாக அகந்தை வேறுபடுகிறது; பேதப் படுகிறது. பேதமறு நேசம் என்பது பேதம் அற்ற அன்பு, அது ஆன்ம நிலையே. ஆன்ம நிலைப்பாட்டில்தான் பேதம் அறுந்த அன்பு சாத்தியம். அது பூரண அன்பு மயம்.

**அலை சேர்ந்து உழலும் அடியார்:**

ஆன்மா இரண்டற்ற நிலை ஆதலால் அதற்கு போவதற்கு என்று அன்னியமாக எதுவும் இல்லை. போக்கும் வரவும் இல்லாத புண்ணியன்.

ஆக அது சலனப்பட எல்லை என்று ஒன்றும் இல்லை, ஆகவே அது அசலம். ஆன்மாவினின்று இரண்டாக அகந்தை பிரியும் போது போகவும் வரவும் இரண்டான வேறு இடம் தோன்றிவிடுகிறது. எனவே



சலனம் தோன்றிவிடுகிறது. இரண்டான அகந்தை உயிர் அகந்தையாக பல உயிர் தோற்றங்களுக்கு வித்தாகிறது.

ஆன்மாவினின்று பிரிந்து சென்ற உயிர்கள் அகந்தை வயப்பட்டு பல்கால் மாறி ஓடி அலைகிறது. மீண்டும் தன் உற்பத்தி ஸ்தானத்தை,தனது தாய் வீட்டை தஞ்சம் அடைய வழி அறியாது பல்வேறு பிறவிகள் எடுத்த வண்ணம் உழன்று திரிகின்றது. இவ்வாறு திரும்பும் வழியறியாது உயிர்கள் தவிக்கின்றன. இவற்றுள் சில உயிர்கள் பரபக்தியினால் பக்குவம் அடைகின்றன. பக்குவப்பட்டும் தவிக்கும் உயிர்களுக்கு அவற்றின் உண்மை நிலையாகிய ஆன்ம உருவில் ஒடுங்கும் பாங்கு விளங்கவேண்டி ஆன்மன் ஞானப் பிறவிகளைத் தோற்றுவிக்கிறான். ஞானப் பிறவிகள் தனது உயிர் தத்துவத்தினை தானாக அறிந்து கொண்டவை. அத்தகைய ஞானப் பிறப்புகள் பக்குவப்பட்ட உயிர்களுக்கு தனது ஆதாரத்தை, தனது மூலத்தை உணர

வழிகாட்டுகின்றன. இதை ஆன்மா என்றும் கடவுள் என்றும் கூறப்படும் மூலாதாரத்தின் மகத்துவம் எனலாம்.

இதுவே குன்றாத ஞானக் கொடைக் குணம். தன்னில் இருந்து பிரிந்து சென்ற சேய்களை தன்னிடம் சேர்விக்கும் கருணை கண்ணோக்கம் என்றும் இதனைக் கூறலாம். இங்கனம் ஆன்மாவில் இருந்து அகந்தை வடிவாய்ப் பிரிந்து அலை சேர்ந்து உழலும் பிறவிகள் எனப்படும் தேர்களை நிலைசேர்த்தலே அருள் வடிவான ஆன்மாவின் ஓயாத வேலை. பம்பரமாய் எவ்வுயிரையும் பாசாத்தால் ஆட்டுவித்து அம்பரமாய் நிற்கும் அதிசயம் இது.

அருள் கடலான இறைவன் உயிர்களின் சேட்டையை ஒடுக்கி, அகந்தையப் போக்கி, ஈர்த்து அவைகளைத் தன் போல் அசலமாக சேர்விக்கிறது.

ஆன்மாவில் இருந்து அகந்தையாக பிரிந்து, எல்லாவிதமான ஆட்டத்துக்குப் பின் பிறவிச் சுழற்சியில் இருந்து விடுபட விழைவர் பக்குவர்கள்,

தங்கள் ஆற்றல், முயற்சிகள் தோல்வி அடைந்து நிலைகுலைந்து போய்,பொய்யானவை எல்லாம் போய் அகல மெய்ஞ்ஞானம் மிளிர்ந்து ஆன்மாவில் மீண்டும் சேர்க்கப்படுகிறார்கள். கருணையால் அவ்வுயிர்களை ஆன்மாவாகிய தன்னிடம் சேர்த்துக் கொள்வது ஒன்றையே கடமையாகக் கொண்டு அருள் ஆற்றுபவன் கண்ணார் அமுதக் கடவுள்.

ஏன் உயிர்கள் தானாகவே ஆன்மாவில் ஒடுங்க முடிவதில்லை:

ஆன்மா அகந்தை அற்ற நிலை. ஆன்மாவில் ஒடுங்க உயிர்கள் முயற்சி மேற்கொள்வது என்பதில் நான் முயற்சிக்கிறேன் என்னும் செய் வினை ஆகிய அகந்தை அடங்கியுள்ளது. அகந்தை உள்ளவரை ஆன்ம விளங்காது. புத்தி அகங்காரம் என்பதாக முறையே

பிரம்மனும்,திருமாலும் எல்லை அற்ற ஆன்ம ஒளியின் இல்லாத அடி முடி காண முயல்கின்றனர்

அம்முயற்சியில் தோல்வி அடைந்து, நிலை குலைந்து, இயலவில்லை என்று செயல் அற்று சரண் அடைந்த பின்னரே ஆன்ம ஒளிக்காட்சி கொடுக்கப் பட்டது.

அக்ஷரமணமாலையில் ‘சேராய் எனின் மெய் நீராய் உருகிக் கண்ணீராற் அழிவேன் அருணாசலா’ என்பதில் வரும் ‘சேராய் எனின்’ எனும் பதம் இறைவன் சேருவதைத்தான் கூறுகிறது. நான் சேர்வது என்ற முயற்சியான அகந்தை வினையாற்றல் கூறப்படவில்லை.

அடுத்து ‘சை எனத் தள்ளில் செய்வினை சுடுமலால் உய்வகை ஏது உரை அருணாசலா’, என்பதில் நீ என்னை ஒதுக்கித் தள்ளினால், நான் மீண்டு ஏழ முயலவேண்டும், அப்போது நான் முயலுவது என்ற செய்வினை அகந்தை ஆதலால் நான் உய்ய, ஆன்மாவை அடைய இயலாது,என்பதாக உள்ளது.

எனவே உயிர்கள் மீண்டும் ஆன்மாவில் ஒடுங்க ஆன்மாதான் கருணையினால் ஆட்கொள்ள வேண்டும். ஆகவேதான் ஞானப் பிறவிகள் மீண்டும் மீண்டும் தோன்றி உதவும் தொடர் நிகழ்வு நடைபெறுகிறது. அதனால்தான் பகவத் கீதையில் பகவான் ‘சம்பவாமி யுகே யுகே’ என்கிறாரோ!

தியாகப் பிரம்மம் ‘பாடிப் பெற்றாரா?’ என்று பகவானிடம் எழுப்பப்பட்ட வினாவுக்கு, பகவான் “‘பாடிப் பெறவில்லை, பெற்றதைத்தான் பாடினார்’ என்று இதனால்தான் விடைப்பகர்ந்தாரோ?” நாம் எதையும் அடைவது என்பது இல்லை. நாம் ஆட்கொள்ளப் படுகிறோம் என்பதே சரி.

(மற்றவை தொடரும்)



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### 144 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவான் ரமண மகரிஷிகளின் 144 ஆவது ஜயந்தி விழா இன்று (28/12/2023) ஸ்ரீரமணாச்ரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதிகாலை முதலே தனுர் மாத பாராயணம், ஜயந்தி தின சிறப்புப் பாராயணம், மஹன்யாச ருத்ரஜபம், விமரிசையான அபிஷேகங்கள் மற்றும் பல வண்ண மலர்களால் அலங்காரங்கள் முதலியன நடைபெற்றன.*

*பூமாலைகளாலும் பாமாலைகளாலும் அன்பர்கள் தங்கள் குருவான அருணாசல ரமணனை வழிபட்டனர். இறுதியாக ஆரத்தி நடைபெற்றது. இவ்வாறாக 144 ஆவது ரமண ஜயந்தி வைபவம் சிறப்பாக நடந்தேறியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ரமண மகரிஷிகளின் அருளைப் பெற்றனர். கலந்து கொண்ட அன்பர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் சிறப்பு உணவு விருந்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.*

*ரமண ஜயந்தியினையொட்டி* Ramanasramam Centenary Souvenir *(ரமணாச்ரம நூற்றாண்டு நினைவு மலர்), வேதபாராயணம் (சமஸ்கிருதம் ஆங்கில உரையுடன்), சத் தர்சனம் (குஜராத்தி), பகவான் ரமணா (குஜராத்தி) மற்றும் சூரி நாகம்மாவின் கடிதங்கள் பெங்காலி மொழிபெயர்ப்பு (ஸ்ரீ ரமணாஸ்ரம பத்ரபாலி) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. புத்தகங்கள் விற்பனைக்கு வந்த பிறகு பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அறிவிக்கப்படும்.*

*மேலும் இந்த விழாவில்* AI Chatbot *ஒன்றும் வெளியிடப்பட்டது. கணினி செயற்கை நுண்ணறிவினைக் கொண்டு இயங்கும் இந்த சாட்பாட்-ல் பகவானின் போதனைகள் உள்ளீடு செய்யப்பட்டு, நுணுக்கமாக*



*வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சாட்பாட்டை பயன்படுத்தி, பகவான் போதனைகளில் தேவையான தகவல்களை இந்த சாட்போட்டை இல் அன்பர்கள் தேடி விடைபெறலாம். இந்த சாட்பாட்டினை கீழ்க்கண்ட இணைப்பின் வாயிலாக பயன்படுத்தலாம்.*

https://chat.gururamana.org/

*எவ்வாறு பயன்படுத்துவது? மேலே உள்ள லிங்கை கிளிக் செய்யவும். ஸ்ரீ பகவானின் போதனைகளிலிருந்து பதில்களைப் பெற* Chart Box *இல் ஏதேனும் கேள்விகளைக் கேளுங்கள். உடனே பதில் கிடைக்கும். ஸ்ரீ பகவானின் 144 ஆவது ஜயந்தி நன்நாளில் இந்த* ChatBot *வெளியிடுவதில் ரமணாஸ்ரமம் மகிழ்ச்சி அடைகிறது.*

**ஆருத்ரா தரிசனம் – நடராஜர் அபிஷேகம்**

*ரமண ஜயந்திக்கு முன்னதாக 27-12-2023 அன்று ஆருத்ரா தரிசன தினத்தையொட்டி அதிகாலை 4.30 மணியளவில் மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீநடராஜருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.*

# ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை

## அனந்தசாமி ஞானமண்டபம் 41, அலமேலு மங்காபுரம், திருமயிலை — சென்னை 600004

## 144 ஆவது ஸ்ரீ ரமண ஜயந்தி

## 28 டிசம்பர் 2023

### காலை 06.00 முதல் மதியம் 12.15 வரை

*மங்கள இசை, மஹன்யாசம், ஸ்ரீ ரமண சஹஸ்ரநாமம் அர்ச்சனை, உள்ளது நாற்பது மற்றும் அக்ஷரமணமாலை தமிழ்ப்பாராயணம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. திரளாக கூடிய ரமண அன்பர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

### மாலை 04.00 முதல் இரவு 07.15 வரை

*விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் ரமண சந்நிதிமுறை பாராயணம் நடைபெற்றது. திரு. தியாகராஜன் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்.*

*இரவு ரமண திருவுருவம் தாங்கிய ரதத்தில் மயிலை மாட வீதிகளில் அன்பர்கள் புடைசூழ திருவீதி உலா விமரிசையாக நடந்தேறியது. வீதி உலா ஏற்பாடுகளை மயிலை ஸ்ரீகாந்த் அவர்கள் சிறப்புற எப்போதும்போல் ஏற்பாடுகளை செய்திருந்தார். இதற்கு முன்பாக 24, 25 மற்றும் 26 டிசம்பர் 2023 ஆகிய நாட்களில் லக்ஷார்ச்சனை நடைபெற்றது.*

## 144 ஆவது ஸ்ரீ ரமண ஜயந்தி விழா

### ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை (ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்டது)

### 28 டிசம்பர், 2023

*காலை மங்கள இசையுடன் துவங்கி, வேத பாராயணம், ஸ்ரீ ரமண அஷ்டோத்ர பூஜை நடைபெற்றது. முற்பகல் 09.30 மணிக்கு திருமயிலை கபாலீஸ்வரர் கோவில் ஆஸ்தான ஓதுவார் திருவாசகச் செந்நாவலர் அய்யா சத்குரு நாதர் அவர்கள் பக்க வாத்தியங்களுடன் ஸ்ரீ ரமண சந்நிதி*



*முறை பாடல்களை பன்னிசையுடன் பாடி அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தினார். பின்னர் அக்ஷரமணமாலை, புனர்வசுவண்ணம், தியானப்பாட்டு கூட்டு பாராயணம் நடைபெற்றது. முடிவில் கூடியிருந்த ஐநூறுக்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டது.*

## 144 ஆவது ஸ்ரீ ரமண ஜயந்தி விழா

### ஸ்ரீ முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

### 28 டிசம்பர் 2023

*ராமகிருஷ்ண மடம் சுவாமிஜி முன்னிலையில் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. மனவளக்கலை பேராசிரியர் சுப்பு ராஜு மற்றும் முருகேசன் ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள். இருநூறுக்கு மேற்பட்ட பக்தர்கள் பங்குபெற்றனர். அனைவருக்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது. திரு சிரஞ்சீவி அவர்கள் அனைத்து விழா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்தார்.*

## பொள்ளாச்சி கோட்டூர் மலையாண்டிபட்டினம் ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம்.

*ஆசிரியர் பாலு அவர்கள் இல்லத்தில், 24.12.2023 அன்று ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 144 வது ஜயந்தி தின விழாவினையொட்டி திருவாசக முற்றோதல் நடைபெற்றது. பொள்ளாச்சி ஸ்ரீ அருணாசல ரமண சத்சங்கம் தலைவர் ரமணகுமார்—தமயந்தி தம்பதியினர் மற்றும் பொள்ளாச்சி உடுமலை அடியார் பெருமக்கள் கலந்து கொண்டனர். திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை பொள்ளாச்சி திருக்கயிலாயம் சிவனடியார்கள் திருக்கூட்டம் முன்னின்று நடத்தினார்கள். மதியம் தீபாராதனைக்குப் பின் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ரமண மந்திரம், பழனி

*ரமண மகரிஷிகளின் 144 ஆவது ஜயந்தி விழா 30-12-2023 அன்று மாலை ஷண்முக புரத்தில் உள்ள ஸ்ரீ ரமணா இல்லத்தில் கொண்டாடப்பட்டது. அங்கு திரளாகக் கூடிய அன்பர்களிடையே சிறப்பு சொற்பொழிவுகள் தலைவர் அருள்நிதி சோம சுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. திருவாளர்கள் M. சுப்ரமணியசிவா, திருமலைசாமி மற்றும் பார்வதி மீனாட்சி சுந்தரம் ஆகியோர் ரமணரைப் பற்றிய தலைப்புகளில் உரை ஆற்றினர்.*





*திரு. சிதம்பரம் குற்றாலம் அவர்கள் நிறைவு உரை ஆற்றினார். அன்பர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது.*

**ரமணாலயம், பூண்டி, தஞ்சாவூர்**

*144 ஆவது ரமண ஜயந்தி விழா, தஞ்சாவூர் பூண்டி ரமணாலயத்தில் 30-12-2023 அன்று கொண்டாடப்பட்டது.*

**ஸ்ரீ ரமண சத்கங்கம், நங்கைநல்லூர், சென்னை**

*28-12-2023 அன்று காலை வேத பாரயணம் மற்றும் மாலை திரு. கிருஷ்ணா அவர்களின் சிறப்பு சொற்பொழிவுடன் அன்பர் திரு. கணேஷ் அவர்களின் இல்லத்தில் கொண்டாடப் பட்டது. அக்ஷரமணமாலை பாராயணத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். அனைவருக்கும் ரமண பிரசாதம் வழங்கப்பட்டது.*

## சுவாமி ரமணானந்தா ஆராதனை

*சுவாமி ராமானந்தரின் (டி.என்.வேங்கடராமன்) ஆராதனை அவரது சமாதியில் இன்று 29/12/2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. 'வெங்கிட்டு' என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர் ஆரம்ப நாட்களில் ரமணாச்ரமத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு கருவியாக இருந்த கர்மயோகியாவார். 1953 முதல் 1995 ஆம் ஆண்டுவரை ரமணாச்ரமத்தின் தலைவராக இருந்து பின்னர் சந்நியாசம் பெற்று சுவாமி ரமணானந்தரானார்.*



# உலகை நீத்த ரமண அன்பர்கள்

## க்ருத்தலூரு கிருஷ்ணமூர்த்தி

*ரமண ஆன்மிக இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்தே பங்கு கொண்டு உயர்த்திய க்ருத்தலூரு கிருஷ்ணமூர்த்தி டிசம்பர் 16 அன்று பகவான் பாதகமலங்களை அடைந்தார். ஹைதராபாத் ரமண கேந்திரத்தை பெருமதிப்பிற்குரிய டாக்டர் K. சுவாமிநாதன் 1979 இல் துவங்கி நடத்தியபோது அவர்க்கு உறுதுணையாய் இருந்து ரமண இயக்கம் ஆந்திரப் பிரதேசத்தில் செழித்து வளரத் துணை புரிந்தவர். அவரது பெற்றோர் பகவானிடம் மிக்க பக்தி கொண்டவர்கள். பகவான் சந்நிதியில் அவர் கிருஷ்ணமூர்த்தி என்று பெயரிடப்பட்டார். சிறுவயது முதல் பகவானைப் பலமுறை தரிசிக்கும் பேறு பெற்றவர். “அன்பர்க்கு அன்பனாயிட வருள் அருணாசலா” என்ற பகவானின் வாக்குப்படி, பகவானின் அணுக்கத் தொண்டராய் பல்லாண்டு பணியாற்றிய கோடூரி வெங்கடராமம் அவர்களை இறுதிக் காலத்தில் பராமரித்தவர். அவரது இல்லத்தில் வழக்கமாக நடைபெற்று வந்த சத்சங்கங்கள் பக்தர் பலரைப் பெரிதும் ஈர்த்தது. 1969 ஆம் ஆண்டு பகவான் சந்நிதியில் அவர் பெற்ற உன்னத அநுபவம் அவரை ரமண பக்தியில் மிகத் தீவிரமாக ஈடுபடச் செய்தது. ஸ்வாமி ரமணானந்த சரஸ்வதி முதலாய ரமண ஞானம் பெற்ற எல்லோரும் அவருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தனர்.*

## ஜி.வி. ராமாராவ்

*ஹைதராபாத் ரமண கேந்திரத்தின் தலையாய அன்பர்களில் ஒருவரான ஜி.வி. ராமாராவ் நவம்பர் 30. 2023 அன்று 85 வயதில் பகவான் திருவடி எய்தினார். பகவானே தனது சத்குரு என்று தேர்ந்தபின் ஒவ்வொரு வாரமும் தவறாது ரமண கேந்திர சத்சங்கங்களில் பங்கு பெற்று வந்தார். பகவானிடம் முற்றும் சரணாகதி செய்து கேந்திரத்திற்கு பெரும்பணி ஆற்றி வந்தார். ஹைதராபாத் ரமண கேந்திரத்தின் பெரியக் கட்டிடக் கட்டமைப்பு எழுவதற்கும் பெரும் துணையாகத் திகழ்ந்தார். கட்டிடம் எழும்போது ஒவ்வொரு நாளும் அங்குச் சென்று மேலாண்மை செய்தவர். தன்னலமற்ற தொண்டற்கு இலக்கணமாகத் ராமாராவ் திகழ்ந்தார்.*



**ஸ்ரீமதி. பட்டம்மாள்**

*ஸ்ரீமதி. பட்டம்மாள் தனது எட்டாவது வயதில் பகவானை தரிசனம் செய்யும் பேறு பெற்றவர். எச்சம்மாளிடம் இருந்து பகவானுக்கு உணவு கொண்டு செல்லும் பாக்கியம் பட்டம்மாளின் சகோதரியன் கணவருக்கு கிடைத்தது. பட்டம்மாளின் மாமனாரும் பகவானைத் தரிசித்தவர்.*

*ரமணாச்ரமத்திற்கு அருகிலேயே தனது வாழ்நாள் கழிய வேண்டும் மற்றும் தமிழ்ப்பாராயணத்தை இறுதிநாள் வரை கேட்க வேண்டும் என்று விரும்பினார். இதை பூர்த்தி செய்யும் விதமாக ஆச்ரமத்தில் சேவை செய்து வரும் தனது மகன் சந்திரமௌலியுடனே ஆச்ரமத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். ஆச்ரமமும் இறுதிநாள் வரை அன்னாரை பராமரித்து உதவியது. பட்டம்மாள், 10 நவம்பர் 2023 அன்று மங்களகரமான பிரதோஷ காலத்தின்போது தனது 98 ஆவது வயதில் உடலை நீத்தார். அவருக்கு டி.வி. சந்திரமௌலி, டி.வி ராமகிருஷ்ணன் என்ற இரண்டு மகன்களும் பானுமதி சிவராமன் என்னும் மகளும் உள்ளனர்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542


*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




28/12/2023 அன்று ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற
பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 144 ஆவது ஜயந்தி விழா
நிகழ்வின் புகைப்படத் தொகுப்பு.




144 ஆவது ரமண ஜயந்தி விழாவினையொட்டி
ஐந்து நூல்கள் மற்றும் AI–சாட்பாட் வெளியிடப்பட்டது.

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

